20-4-1952 M.Y.M M M BANGALORE, 2

போர்வாள்

வாள் 5 வீச்சு 29

19-4-52 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

மா. இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை அணா 2

பஜகோவிந்தம்! பஜகோவிந்தம்!!

[பாண்டியன்]

மாலை நேரம். மணி ஆறு இருக்கும். நான் என் இல்லத்தில், புத்தக அறையில் உட்கார்ந்து கொண்டு, அப்போதுதான் வந்த நாளிதழ்களைப் புரட்டிக் கொண்டிருந்தேன். "பாண்டியா! என்ன படிக்கிறாய்? ஆச்சாரியாரின் சொற்பொழிவா?" என்று கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தான் சேரன்.

"வா, வா! சேரா! உனக்காகத் தான் காத்துக்கொண்டிருக்கேன்!"

"எனக்காகவா? என்னப்பா என்மீது உனக்கு இவ்வளவு அக்கறை பிறந்துவிட்டது?"

"வேறு ஒன்றுமில்லை சேரா. வீட்டில் ஒரே புழுக்கமாக இருந்தது. கடற்கரைப் பக்கமாகச் சிறிது நேரம் உலாவிவிட்டு வரலாமா என்று எண்ணினேன். உடனே உன் நினைவு வந்தது. வருகிறாயா போகலாம்."

"கடற்கரைக்கா? இப்போதா? என்னால் முடியாது"

"ஏன்? வேறு ஏதாவது அவசர ஜோலி இருக்கிறதோ?"

"ஆமாம்! மிக அவசரமான ஜோலி! இப்போதே நான் போயாக வேண்டும்! இதோ இப்படி என்னோடு வா! உன் அறைக்கு வெளியே நான் எதைக்கொண்டு வந்து வைத்திருக்கிறேன் பார்!" என்று சொல்லிக் கொண்டே, சேரன், என்னை, என் அறைக்கு வெளியே அழைத்துக்கொண்டு போனான்.

அறைக்கு வெளியே, சுவர் ஓரமாக, இரண்டு மூன்று கடப்பாறைகள் சாத்தி வைக்கப்பட்டிருந்தன. சேரன் அவற்றைச் சுட்டிக்காட்டினான்.

"நீதான் இவற்றையெல்லாம் கொண்டுவந்து வைத்திருக்கிறாயா சேரா?"

"ஆமாம்."

"ஏன்?"

"ஏனா?" நான் முன்னமேயே சொல்லவில்லையா எனக்கு மிக அவசரமான வேலைகள் இருக்கின்றன—நான் உடனே போயாக வேண்டுமென்று! அந்த வேலைகளைச் செய்வதற்காகத்தான் இந்தக் கடப்பாறைகள் தேவைப் படுகின்றன."

"அது என்ன வேலையப்பா அது கடப்பாறைகளைக் கொண்டு செய்யும் வேலை? எந்தக் கட்டிடத்தை யாவது இடித்துத் தகர்த்துத் தரை மட்டமாக்கப் போகிறாயா என்ன?"

"ஆமாம் பாண்டியா ஆமாம்! சாதாரண கட்டிடத்தை அல்ல! சட்ட சபைக் கட்டிடத்தை இடிக்கப் போகிறேன்!"

"சட்டசபைக் கட்டிடத்தையா?"

"ஆமாம்! சட்ட சபைக் கட்டிடத்தை இடிக்கப் போகிறேன்! சர்க்கார் மாளிகையைத் தகர்க்கப் போகிறேன்! சிறைச்சாலைக் கட்டிடங்களைத் தூள் தூளாக்கப் போகிறேன்! நீதி மன்றங்களையெல்லாம் தவிடு பொடியாக்கப்போகிறேன்!"

"அட பாவி!"

"அட பாவியாவது! இன்னும் கேள் பாண்டியா! ஆஸ்பத்திரிக் கட்டிடங்களையும், பல்கலைக் கழக மாளிகைகளையும், கல்லூரி மண்டபங்களையும், ஆரம்பக் கல்வி புகட்டும் பள்ளிக்கூடங்களையும், பல்வேறு தொழிற் சாலைகளையும், ஒன்றுவிடாமல், இடித்துத் தகர்த்துத் தரைமட்டமாக்கப் போகிறேன்."

"என்ன சேரா இது? கல்லூரி மங்கன் போன வழி காடுமேடெல்லாம் தவிடுபொடி என்று கதை பாடுவார்களே அதுபோல அல்லவா இருக்கிறது நீ செய்ய இருக்கிற காரியம்?"

"எதற்காக இப்படியெல்லாம் செய்யப் போகிறேன் என்று கேட்கிறாயா? தாராளமாகக் கேள்! தயக்கமில்லாமல் விடை கூறுகிறேன்! இப்படியெல்லாம் நான் செய்ய வேண்டுமென்று ஆச்சாரியாருடைய கட்டளை!"

"ஆச்சாரியாரா உன்னைப் பார்த்து இப்படி ஒரு கட்டளையை விதித்திருக்கிறார்! என்ன சேரா கதை அளக்கிறாய்? அளப்பதுதான் அளக்கிறாயே பொருத்தமாகவாவது அளக்கிறாயா? அதுவுமில்லை! பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டாமா? கேழ்வரகில் போய் நெய் வடிகிறது என்று சொன்னால் யார்தானப்பா நம்புவார்கள்? உண்மையைச் சொல்லு, ஆச்சாரியார்

(4-ம் பக்கம் பார்க்க)

சிறு கதை

ஆளுக்கேற்ற மதிப்பு

[காழி. கலைச்செல்வன்]

அவன் அந்தக் கயிற்றுக் கட்டிலில் சுருண்டு கிடந்தான். கண்கள் பஞ்சடைந்து கிடந்தன. கன்னங்கள் ஒட்டிப் போய்க் கைகால்கள் சூம்பிக்கிடந்தன. வாலிபத்தில் வயோதிகம், அவனை அணைத்துக்கொண்டிருந்தது. ஒட்டி உலர்ந்த அவனுடைய உதடுகள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டிருந்தன. இடையிடையே லொக் லொக் கென்ற இருமல். காச நோய் அவனுடைய உயிரை அணுவணுவாக உறிஞ்சிக்கொண்டிருந்தது.

அந்தப் பச்சிளங்குழந்தை-வறுமையின் பிரதிபிம்பம் பாலுக்கு ஓயாது 'வீச் வீச்' சென்று அழுது கொண்டிருந்தது.

அந்தக் குடிசையின் கூரை கதிரவனின் கதிர்களுக்கு வரவேற்புரை வழங்கிக் கொண்டிருந்தது. ஆம்! அந்தக் குடிசைதான் அவர்களுக்கு வசந்த மண்டபம்—உல்லாசப் பூங்கா-பளிங்கு மாளிகை.

அந்தக் குடிசையின் மூலை ஒன்றில் தலையில் கையை வைத்துக் கொண்டு ஏதோ சிந்தனை செய்து கொண்டிருந்தான் வரதன். அவன் கண்களிலே கண்ணீர் கசிந்துகொண்டிருந்தது.

சற்று நேரத்திற்கொருமுறை அவனிடமிருந்து கிளம்பும் நீண்ட பெருமூச்சு அங்கே நிலவிய இருமலொலியுடன் சேர்ந்து ஒலித்தது. அவனுடைய எண்ணங்கள் எங்கேயோ சஞ்சரித்துக்கொண்டிருந்தன.

''அண்ணே அண்ணே'' என்ற குரலுடன் குடிசையினுள் நுழைந்தான் பூராசாமி. பூராசாமியின் குரல் சிந்தனை உலகிலிருந்த வரதனை வேதனையுலகிற்கு அழைத்து வந்தது.

''என்ன பூராசாமி போனகாரியம் என்னாச்சு?'' — அவன் குரலிலே ஆவல் தொனித்தது.

''ஆவது என்ன? ரெண்டு ரூபா கொடுத்தால்தான் மருந்து கொடுப்பாராம்'' — பெருமூச்சு கலந்தக் குரலில் கூறினான் அவன்.

இரண்டு ரூபாய்கள் என்றவுடன் வரதனுடைய திகில் அதிகமாகியது. இரண்டு ரூபாய்களுக்கு எங்கே போவது? யாரிடம் கேட்பது? என்ற ஏக்கம் அவனுடைய இதயத்தில் துயரத்தை நிரப்பியது. பூராசாமியும் வரதனின் பட்டியலில் இடம் பெற்றவனாகையினால் அவனிடம் அவன் உதவி பெற விரும்பவில்லை.

தூரத்திலிருந்த மணிக்கூண்டு மணி பன்னிரெண்டடிக்கும் ஓசை அவனுடைய செவியில் மோதின.

''அஞ்சலை, அஞ்சலை'' என்று மனைவியை அன்புடன் அழைத்தான். .

''ஏங்க...! என்ற குரலுடன் புரண்டுபடுத்தாள் அவள்.

''ஒரு மணி வண்டியைப் பார்த்துவிட்டு மருந்து வாங்கிக்கொண்டு வருகிறேன்'' என்று கூறிக் கொண்டு கிளம்பினான் வரதன், அவள் புடவையின் முனையில் போட்டிருந்த இறுகிப்போன முடிச்சை அதிலிருந்த இரண்டணாக் காசை எடுத்து அவனிடம் நீட்டினாள். அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்தன. ''சாயா குடித்துப்போங்கள்'' என்று அன்பு கனிந்த குரலிலே கூறினாள் அவள். அன்பு மனைவி தந்த அந்த இரண்டணாவைப் பெற்றுக்கொண்டு வண்டியைப் பூட்டினான் வரதன்.

அந்தத் தெருக்கோடியிலுள்ள 'டீ'க் கடையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது வரதனுடைய வண்டி.

''ஐயா சாமி, இரண்டு நாளாப் பட்டினிங்க''—என்ற ஈனக் குரலுடன், வந்து நின்றாள் ஒரு இளம் பெண்...இல்லை பிச்சைக்காரி!

அவள் கையிலே சுமார் ஒரு அடி நீளத்திலே தோலினால் போர்த்தப்பட்ட ஒரு 'உயிருள்ள' எலும்புக் கூடு காட்சியளித்தது.

அந்த இரு வேதனை பிம்பங்களைக் கண்ட வரதனுடைய ஏழை இதயத்திலே இரக்கம் சுரந்தது. அவனுடைய கை மனைவி தந்த இரண்டணாவை பைக்குள் துழாவிற்று. பையின் எங்கோ ஒரு மூலையில் ஒளிந்துகொண்டு கிடந்த அந்த இரண்டணாவை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு மீண்டும் வண்டியை ஓட்டினான் வரதன்.

''வண்டி வேணுமா வண்டி''— அவன் கூவினான் ஒவ்வொருவரையும் நோக்கி. அவன் பக்கம் அவர்கள் திரும்பிக்கூடப் பார்க்காமல் சென்றனர். அவர்களின் செயல் அவனுடைய வதனத்தில் கவலையின் செயலை நர்த்தனமாடச் செய்தது.

புகை வண்டி நிலையத்திற்கும், பஸ்டாண்டிற்கும் வண்டியைத் திருப்பித் திருப்பி ஓட்டிக்கொண்டிருந்தான் வரதன். நேரமும் சுழன்றோடிக் கொண்டிருந்தது.

கூலிக்கு வண்டி ஓட்டுவதுதான் வரதனின் தொழில். அவனுடைய தந்தை அவனுக்குக் கற்றுக் கொடுத்துச் சென்ற தொழில் வண்டியை எப்படி ஓட்டுவது என்பதுதான்! வரதன் கந்தசாமியின் ஜட்கா வண்டியைக் கூலிக்கு ஓட்டிக்கொண்டிருந்தான். தினந்தோறும் கிடைக்கும் வருமானத்தில் மூன்றில் ஒரு பங்குதான் வரதனுக்குக் கிடைக்கும் இந்த பஸ்காரர்கள் வேறு வண்டிக்காரர்களுக்குப் போட்டியாக 'டவுன் சர்வீஸ்' ஆரம்பித்து விட்டார்கள். அதிலிருந்து வரதனுக்கு வருமானம் குறைந்துவிட்டது.

வண்டியும் குதிரையும் பார்வைக்கு அழகாக இருந்தாலாவது உழைக்காது வாழும் உன்மத்தர்

கள் அவன் வண்டியை அணுகுவார்கள். இன்றோ நாளையோ என்று உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருக்கும் அவனது குதிரையையும் ஓட்டை வண்டியையும் கண்டால் மாடிவீட்டு செல்லப் பிள்ளைகள் அதில் ஏறுவார்களா?

இரவு மணி ஏழடித்தது. பேரிரைச்சலுடன் 'செங்கோட்டை' பாசஞ்சர் நிலையத்தில் வந்து நின்றது.

"வண்டி வேணுமா சார் வண்டி" மீண்டும் தன்னுடைய பழைய பல்லவியை ஆரம்பித்தான் வரதன். இருளிலே ஓர் மின்னல் தோன்றுவதைப் போல அவன் வண்டியை நோக்கி வந்தார் ஒரு ஆசாமி. அவரது வருகையைக் கண்ட வரதன் வதனத்தில் மகிழ்ச்சி ரேகைகள் படர்ந்தன.

"வண்டி வேணுங்களா சாமி?"

"என்னப்பா குதிரை வேகமாய் போவுமா?"

"என்ன சாமி அப்படி கேக்கிறீங்க உட்கார்ந்து பாருங்களேன்.

"சரி சட்ட நாதபுரம் போகணும் என்ன கேக்கறே"

"ரெண்டரை ரூபா கொடுங்க சாமி."

"ரெண்டு ரூபாய் தான்! என்ன சொல்றே?"

"சரி ஏறுங்க சாமி"

அவனுடைய இதயம் இன்ப காதம் எழுப்பியது. இன்றைக்கு இதாவது கிடைத்ததே என்ற மகிழ்ச்சியில் குதிரையை சுவுக்கால் சொடுக்கினான் வரதன்.

வீட்டிற்குச் செல்லும் வேகத்தில் குதிரையும் வழக்கத்திற்கு மாறாக சிறிதுவேகமாகவே ஓடிற்று. குறிப்பிட்ட இடத்தில் வண்டியை நிறுத்தினான். வண்டியிலிருந்த அந்த ஆசாமி இரண்டு ரூபாய்களை அவன் முகத்திலே வீசி எறிந்துவிட்டு எதிரே இருந்த ஹோட்டலை நோக்கி விரைந்தார். உருளும் பணத்தைப் பொறுக்கி எடுத்துக் கொண்டு வண்டியைத் திருப்பினான் வரதன். கடைவீதியை நோக்கி வண்டி ஓடிக்கொண்டிருந்தது.

அந்த இரண்டு ரூபாய் வெள்ளி நாணயங்கள் அவன் கையிலே மின்னியது. அவனுடைய எண்ணங்களும் மின்ன வாரம்பித்தன.

ஆம்! அந்த இரண்டு ரூபாய்க்கு மருந்து வாங்குவதா? குழந்தைக்கு ரொட்டி வாங்குவதா? வண்டியின் சொந்தக்காரனுக்கு அன்றையப் பங்கைக் கொடுப்பதா? இத்தனைக் கேள்விகளையும் ஒன்றன்பின் ஒன்றாக எழுப்பியது அந்த வெள்ளி நாணயங்கள். அவன் சிந்தித்தான். சிந்தித்துக்கொண்டே வண்டியை ஓட்டினான் — வண்டியை ஓட்டிக்கொண்டே சிந்தித்தான்.

"ஏய் யாரப்பா அது வண்டியை நிறுத்து" — எங்கிருந்தோ அதிகாரத்துடன் ஒலித்தது இந்தக் குரல்.

"ஏங்க சாமி! எங்கேப் போகணும்?" — பதில் கொடுத்துக்கொண்டே குரல் வந்த திசையை நோக்கித் திரும்பினான் வரதன்.

"எங்கேயா? போலீஸ் டேஷனுக்கு"—மீண்டும் ஒலித்தது அந்தக் குரல். குரல் கொடுத்த அந்த உருவத்தைக் கண்டு திடுக்கிட்டான் வரதன்.

"என்னடா முழிக்கிறே வண்டியிலே விளக்கு எங்கே?" என்று கேட்டுக்கொண்டே வண்டியை நெருங்கினார் போலீஸ்கார் பொன்னுசாமி

வரதனுக்கு அப்போதுதான் தெரிந்தது சீறிச் சென்ற காற்றிலே விளக்கு அணைந்துவிட்டதென்று.

"சாமி விளக்கு...!"

"அதெல்லாம் அப்புறம். முதல்லே உன் பெயரைச் சொல்லு"— பொன்னுசாமி மிரட்ட வாரம்பித்தார் "காற்றிலே அணைந்துபோயிடுச்சுங்க. இப்பொ கொளுத்திடறேனுங்க..."

"டேய் மரியாதையாப் பெயரைச் சொல்றியா இல்லே..."

"சாமி சாமி இந்த ஒருதடவை மட்டும் மன்னிச்சுடுங்க சாமி"— வரதன் குரல் தழதழத்தது.

புலியிடம் மான் மன்னிப்புக் கேட்டது!

நரியிடம் ஆடு நல்லெண்ணத்தை எதிர்பார்த்தது!!

"மீறிப் பேசாதே 'லைசென்ஸ்' பறிமுதலாகிவிடும் — பொன்னுசாமி அதட்டினார்,

"வரதங்க பேரு" என்றான் அவன்.

பொன்னுசாமி பேனாவை நோட்டின் மேலே நாட்டியவர் ஏதோ எண்ணியவராய் அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

"ஏய்! அபராதம் கொடுத்தா ஐந்து, பத்துன்னு கொடுக்கணும்லே"

"ஆமாங்க"

"எதிரே நீதிபதி, குற்றவாளிக் கூண்டில்வரதன். விசாரணை நடக்கிறது. முடிவில் விளக்கில்லாமல் வண்டி ஓட்டினதற்காக வரதனுக்குப் பத்து ரூபாய் அபராதம்'— கணநேரத்தில் வரதனுடைய இதயத் திரையிலே தோன்றி மறைகிறது இந்தக் காட்சி.

"கையிலே எவ்வளவு இருக்கு?" —என்று சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே கேட்ட பொன்னுசாமியின் குரல் கேட்டு சுய உணர்வு பெற்றான் வரதன்.

"இரண்டு ருபா இருக்குங்க"!— அவனை யறியாமலேயே உண்மையை உதிர்த்தன வரதனுடைய உதடுகள்.

"கொண்டா அதை" போலீஸ்காரரின் குரல் உள்ளேசென்றது.

(15-ம் பக்கம் பார்க்க)

மகிழ்ச்சிகரமான செய்தி!

"கிளர்ச்சி"

(ஆசிரியர்: இரா. சு. தங்கப்பழம்)

மே 15 முதல், சொந்த அச்சகத்திலிருந்து மீண்டும் வெளியாகிறது. நாடெங்கும் முன்பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

விபரத்துக்கு:—

'கிளர்ச்சி'

திருமங்கலம் (மதுரை Dt.)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உன்னைப் பார்க்க இப்படி ஒரு கட்டளையை விதித்திருக்கிறார்?"

"என்னைப் பார்த்து என்றால் என்னையேதானா? பொதுவாக சென்னை மாகாண மக்கள் எல்லோரையும் பார்த்து இப்படி ஒரு கட்டளையை விதித்திருக்கிறார். நானும் ஒரு சென்னை மாகாணப் பிரஜை தானே! ஆகவே அந்தக் கட்டளை எனக்கும் பொருந்துமல்லவா?

"அப்படியானால் நிஜமாகவே ஆச்சாரியார் இப்படி ஒரு கட்டளையை விதித்திருக்கிறார் என்று கூறுகிறாயா?"

நிஜமாகக் கூறாமல் வேறென்ன விளையாட்டுக்காகவா கூறுகிறேன்? ஆச்சாரியார் அவர்கள், சென்ற வாரம், முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் வானொலியில் ஒரு விரிவுரை ஆற்றினாரே அதை நீ கேட்டுக்கொண்டிருந்தாய் அல்லவா?"

"ஆமாம்."

"அந்த வானொலிப் பேச்சை நிகழ்த்துவதற்கு முன்னால் பத்திரிகை நிருபர்கள் அவரைப் பேட்டி கண்டு அவருடன் நடத்திய உரையாடல் பற்றிய விவரங்களை நாளிதழ்களில் நீ படித்திருக்கிறாய் அல்லவா?"

"படித்திருக்கிறேன்."

"13—4—52 ஞாயிற்றுக்கிழமையன்று சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் அந்த முனிபுங்கவர் மொழிந்தருளிய முதுமொழிக் காஞ்சியையும் நீ பத்திரிகைகளில் படித்திருக்கிறாய்?"

"ஆமாம் — படித்திருக்கிறேன்."

"இந்த மூன்று சொற்பொழிவுகளையும் பத்திரிகைகளில் படித்தறிந்த பிறகுமா பாண்டியா, உனக்கு என் வார்த்தைகளில் சந்தேகம் பிறக்கிறது?"

"படித்தறிந்த பிறகுமா என்கிறாயே! படித்தறிந்த காரணத்தால் தான் சந்தேகமே பிறக்கிறது! அந்த மூன்று விரிவுரைகளிலே, ஒரு இடத்திலாவது ஆச்சாரியார், நீ கூறுவதுபோல சட்டசபையை இடி என்றோ, சர்க்கார் மாளிகையைத் தூள்தூளாக்கு என்றோ, சிறைச்சாலை மதில்களைத் தவிடு பொடியாக்கு என்றோ கூறக் காணோமே!"

"சரி அப்படியானால் ஆச்சாரியார் என்னதான் பேசியிருக்கிறார் அந்த மூன்று சொற்பொழிவுகளிலும்? நீதான் சொல்லேன் கேட்போம். உணவுப் பிரச்சினை, உள்ளத்தை வேதனை வெள்ளத்தால் நிரப்புகிறதே, இந்தப் பிரச்சினையைத் தீர்க்க நீர் என்ன திட்டம் தீட்டப் போகிறீர் என்று நிருபர்கள் கேட்டதற்கு ஆச்சாரியார் என்ன பதில் கூறியிருக்கிறார்?"

"ஆண்டவனைப் பார்த்துப் பிரார்த்தனை செய்யுங்கள்—உணவுப் பிரச்சினை தீரும் என்று சொல்லியிருக்கிறார்."

"நாட்டிலே மழை இல்லையே—மழை இல்லாத காரணத்தால் மக்களுடைய வாழ்விலே வளம் இல்லையே என்று நிருபர்கள் நொந்த மனத்தோடு குறிப்பிட்டபோது ஆச்சாரியார் எந்த வார்த்தையை விடையாக வீசியிருக்கிறார்?"

"பிரார்த்தனை செய்யுங்கள் — பிரார்த்தனை செய்யுங்கள் என்கிற பஜகோவிந்தத்தைத்தான் பதில் மொழியாக அளித்திருக்கிறார்."

"ஏழ்மை தொலையவும், வறுமை தீரவும், இல்லாமை அகலவும், வேதனை குறையவும், பஞ்சம் போகவும், பட்டினிச் சாவுகள் இல்லாமற் போகவும் அவர் காட்டியிருக்கிற மார்க்கம் என்ன?"

"பக்தி மார்க்கம்தான்! அதே பிரார்த்தனைப் பாதைதான்!"

"அதாவது நம் நாட்டையும் சமுதாயத்தையும் நாசக்குழியிலே தள்ளி நரகவேதனையை அடையும்படி செய்திருக்கிற எந்தப் பிரச்சினையைப் பற்றி அவரிடம் எடுத்துக் கூறினாலும், அவர் அந்தப் பிரச்சினைகளையெல்லாம் தீர்ப்பதற்குரிய ஒரே வழி, பஜகோவிந்தம் பஜகோவிந்தம் என்று கூறிவிட்டாரல்லவா?"

"ஆமாம்"

"இப்போது சொல்லு பாண்டியா! நீயே சொல்லு! நாட்டிலே தோன்றுகின்ற எல்லாப் பிரச்சினைகளையும் தீர்த்துவைக்கக் கூடிய ஆற்றல் பிரார்த்தனை ஒன்றுக்குத்தான் உண்டு என்றால், சட்டசபை என்று ஒன்று தனியாக எதற்காக இருக்கவேண்டும்? அதை வைத்து நிர்வாகம் செய்ய ஆயிரம் பதினாயிரம் என்று பணம் எதற்காகச் செலவழிக்கப்படவேண்டும்? உணவுப் பிரச்சினை, உடைப் பிரச்சினை, ஏழ்மைப் பிரச்சினை, இல்லாமைப் பிரச்சினை, பட்டினிச் சாவுப் பிரச்சினை, வீட்டுவசதிப் பிரச்சினை முதலிய எல்லாப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்காகத்தான் சட்டசபை என்கிற அமைப்பு ஒவ்வொரு ஜனநாயக நாட்டிலும் இருக்கிறது. நாட்டிலே ஏற்படுகிற ஒவ்வொரு பிரச்சினையையும் அலசி ஆராய்ந்து பார்த்து, அந்தப் பிரச்சினையைச் சுமுகமான முறையில் தீர்த்துவைப்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்து, திட்டங்களைத் தீட்டி, சட்டங்களை உருவாக்கி, தேவையான பணி புரிவதுதான் சட்டசபையின் கடமை. ஆனால் ஆச்சாரியாரோ, நாட்டிலே உருவாகிற பிரச்சினைகளையெல்லாம் தீர்த்துவைப்பதற்கான ஆற்றல் பிரார்த்தனை ஒன்றுக்குத்தான் உண்டு என்று கூறுகிறார். ஆச்சாரியார் கூறுவதுதான் சரி என்று ஏற்பட்டுவிடுமானால், சட்டசபைகளை இடித்துத் தகர்த்துத் தரைமட்டமாக்க வேண்டியது தானே நியாயம்? எந்தெந்தப் பிரச்சினைகளைக் கவனித்துப் பார்த்துத் தேவையான பரிகாரங்களைத் தேட வேண்டியது சட்டசபையின் கடமையோ அந்தப் பிரச்சினைகளையெல்லாம் பிரார்த்தனையின் மூலமாகத்தான் தீர்த்துக்கட்ட முடியும் என்று ஆச்சாரியார் கூறுகிறார் என்றால், சட்டசபை தேவையில்லை என்று அவர் கூறுவதாகத்தானே அர்த்தம்! ஆகவேதான் நான் சட்டசபையை இடியுங்கள் என்று அவர் கூறியதாகக் கூறினேன். கூறக் கூடாதா?"

சேரன் கேட்கிறான் இதுபோல! நியாயந்தானே அவன் கேட்பது!

எந்தெந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டுமானாலும் பிரார்த்தனை ஒன்றுதான் மார்க்கம் என்றால் அந்தந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்காகவென்று தனித்தனியாக ஒவ்வோர் அமைப்பு எதற்காக இருக்கவேண்டும்?

நாட்டிலே அவ்வப்போது தோன்றக்கூடிய பஞ்சம் பட்டினி அமைதியின்மை முதலிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் சட்டசபை இருக்கிறது. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய மார்க்கம் சட்டசபை அல்ல, பிரார்த்தனைதான், என்று சொல்லப்படுமானால், சட்டசபை எதற்காக இருக்கவேண்டும்?

நாடு முழுவதும் கல்வி நீரோடை பாய்ந்து அறிவுப் பயிர் விளைய வேண்டும் என்னும் உயர்தரமான நோக்கத்தோடுதான் இக்கெட்டி

லும் கல்விச்சாலைகள் நிறுவப்படுகின்றன. ஆனால் கல்வி பரவுவதற்கு கல்விச் சாலைகள் தேவையில்லை, "எல்லாம் வல்ல ஆண்டவனே! எங்கள் எல்லோருக்கும் கல்விச் செல்வத்தைக் கொடுத்தருளும்" என்று பிரார்த்தனை புரிந்தாலே போதும் எல்லோருக்கும் கல்வித்திறமை உருவாகிவிடும் என்று கூறப்படுமானால், கல்விச் சாலைகள் எதற்காக இருக்கவேண்டும்?

பஜகோவிந்தம் பஜகோவிந்தம் என்று ஓயாமல் பாராயணம் புரிந்தவண்ணம் இருந்தாலே போதும் — நோய்நொடிகளெல்லாம் ஒரே கணத்தில் பறந்தோடிவிடும் என்பது உண்மையானால், ஊருக்கு ஊர் ஆஸ்பத்திரி ஒன்று எதற்காக இருக்கவேண்டும்? அந்த ஆஸ்பத்திரியிலே டாக்டர்கள் எதற்காகப் பணியாற்றவேண்டும்?

ஆண்டவனைப் பார்த்து பிரார்த்தனை புரிந்தவுடனே கேட்ட பொருளெல்லாம் கேட்டது கேட்டபடி கிடைத்துவிடும் என்பது மெய்யானால் பல்வேறு பொருள்களை உற்பத்தி செய்யப் பல்வேறு தொழிற்சாலைகள் ஏன் இருக்கவேண்டும்? அந்தத் தொழிற்சாலைகளிலே ஆயிரக்கணக்கான பாட்டாளிகள் ஏன் இடுப்பொடியப் பாடுபடவேண்டும்?

நாட்டு மக்களுக்கெல்லாம் உணவு வேண்டுமா? — பாடு ஒரு பஜகோவிந்தம்!

ஊரிலே உள்ள வியாதிகளெல்லாம் தொலையவேண்டுமா — பாடு இன்னொரு பஜகோவிந்தம்!

தேவையான ஆடைவகைகள் போதுமான அளவு கிடைக்க வேண்டுமா எல்லோருக்கும்—மீண்டும் கூறு ஒரு பஜகோவிந்தம்!

நூற்றுக்கு நூறுபேரும் படித்தவர்களாகி, அறிஞர்களாகி, அறிவின் சிகரங்களாகி, இந்தியாவை இன்பபுரியாக மாற்றும் ஆற்றல் உடையவர்களாக ஆகவேண்டுமா? —அப்படியானால், உம்! ஆரம்பமாகட்டும் பஜகோவிந்தம் இன்னொரு முறை!

சோப்பு வேண்டுமா? சீப்பு வேண்டுமா? ஆணி வேண்டுமா? கோணி வேண்டுமா? இரும்பு தேவையா? ஈயம் தேவையா? வீடு தேவையா? மாடு தேவையா? —தேவைப்படும் பொருள் எதுவாயிருந்தாலும் சரி, போடுங்கள் ஒரு பஜகோவிந்தம்!

இப்படித்தானே கூறவேண்டும் யாரும், ஆச்சாரியாரின் கருத்துக்களை உண்மை என்று ஏற்றுக்கொள்வதாயிருந்தால்!

ஆனால் பிரார்த்தனையின் மூலம் தான் சகல பிரச்சினைகளையும் தீர்த்துக்கட்ட முடியும் என்று ஆச்சாரியார் கூறுகின்ற உதவாக்கரை வாதத்தை எத்தரும் பித்தரும் தவிர வேறு யார் ஏற்றுக்கொள்ள முடியும்?

பிரார்த்தனையின் மூலம் இது வரை உலகத்திலே எந்தப் பிரச்சினை தீர்ந்திருக்கிறது?

மனித சமுதாயம் உலகத்தில் உருவாகிய அந்த ஆதி நாட்களிலிருந்து இன்றுவரை உலகத்தில் செய்யப்பட்டிருக்கிற பிரார்த்தனைகளின் எண்ணிக்கை கோடி கோடி.

ஆனால் ஒரு பிரார்த்தனையாவது மனித சமுதாயத்தின் துயரங்களைத் தீர்த்திருக்கிறதா? நிராபராதிகளின் கண்ணீரைத் துடைத்திருக்கிறதா? அநியாயமாகத் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்திருக்கிறதா?

ஒரு பிரார்த்தனையாவது, சீறும் புயலை, சுழலும் சூறாவளியை, பல ஊர்களை விழுங்கிய கடற் கொந்தளிப்பை, ஆயிரக்கணக்கான மக்களைச் சுட்டுச் சாம்பலாக்கிய எரிமலைக் கனல் வீச்சைத் தடுத்திருக்கிறதா?

ஒரு பிரார்த்தனையாவது, திடீரென்று மூண்ட வெள்ளத்திலிருந்து, சிக்கித் தவித்த மக்களை, மீட்டிருக்கிறதா? எதிர் பாராமல் பரவிய நெருப்பு ஜ்வாலைகளிலிருந்து ஒரு பாவமும் அறியாத மக்களைக் காப்பாற்றியிருக்கிறதா?

ஒரு பிரார்த்தனையாவது விதவையின் வேதனையை, ஏழையின் துயரத்தை, பாட்டாளியின் பரிதாபத்தை, அடிமைகளின் அவல நிலையை மாற்றி அமைத்து அவர்கட்குப் புது வாழ்வை அளித்திருக்கிறதா?

ஒரு பிரார்த்தனையாவது ஜார்களின் ஆணவத்தை, ஜமீன்களின் அக்ரமத்தை, ஹிட்லர்களின் கொடுங்கோன்மையை, முசோலினிகளின் முட்டாள்தனத்தைச் சுட்டுச் சாம்பலாக்கி நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டியிருக்கிறதா?

மனிதன் முயன்றான்—ரேடியோ உருவாயிற்று. மனிதன் சிந்தித்தான்—சினிமா தோன்றிற்று. மனிதன் பணியாற்றினான்—டெலிவிஷன் கிடைத்தது. மனிதன் ஆராய்ச்சி செய்தான் — பென்சிலின் மருந்து கிடைத்தது. மனிதன் நினைத்தான்—வான ஊர்தி அமைந்தது. ஆனால் வெறும் பிரார்த்தனையின் மூலமாக மட்டுமே உருவாயிற்று என்று கூறக்கூடிய ஒரே ஒரு பொருள், ஒரே ஒரு கருவி, ஒரே ஒரு அணு உண்டா உலகத்தில்?

கடவுளுக்காகவென்று கட்டப்பட்ட கோயில்—அதுகூட மனிதனின் முயற்சியால்தான் உருவாயிற்று. அந்தக் கோயிலிலே அமைக்கப்பட்டுள்ள கடவுள் சிலைகள்—அவற்றைக்கூட மனிதனின் முயற்சிதான் உருவாக்கிற்று. அந்தச் சிலைகளுக்குச் செய்யப் படுகின்ற அபிஷேகங்கள், காட்டப்படுகின்ற ஆராதனைகள், நடத்தப் படுகின்ற திருவிழாக்கள், சேர்க்கப்பட்டுள்ள சொத்துக்கள்—எல்லாமே மனித முயற்சியின் விளைவுகள்தான். பிரார்த்தனையின் முடிவுகள் அல்ல.

அவனன்றி ஓரணுவும் அசையாது என்கிற சோமபேறி வேதாந்தத்தை நம்பிக்கொண்டு, அவனைத் தொழுதால் அனைத்தும் முடியும் என்கிற கட்டுக் கதையில் கருத்தைச் சிறைகொடுத்துவிட்டு, மனிதன் வெறும் பிரார்த்தனை புரியும் பிம்பமாக மட்டுமே இருந்துவிட்டிருந்தால், உலகத்தில் இன்று ஏற்பட்டுள்ள முன்னேற்றம் எதுவுமே ஏற்பட்டிருக்காது.

இன்னமும் சக்கிமுக்கிக் கல்லிலேதான் இருந்திருப்போம். தீப்பெட்டிக்கு அருகே வந்திருக்கமாட்டோம்.

அகல் விளக்கைத்தான் நம்பிக் கொண்டிருந்திருப்போம். மின்சார விளக்கைக் கண்டுபிடித்திருக்க மாட்டோம்.

கட்டை வண்டி அளவோடுதான் நின்றுவிட்டிருப்போம். ரயில் வண்டி அளவுக்கு வளர்ந்திருக்க மாட்டோம்.

ஜுரத்தை தேவதையாகவும் அம்மையை மாரியாகவும் காசத்தை கடவுளாகவும் கருதி வணங்குகிற காட்டு மிராண்டிகளாகத்தான் இருந்திருப்போம். எக்ஸ்ரே மருத்துவ முறையும், இனாகுலேஷன் தடுப்பு முறையும் அற்புதமான ஆபரேஷன் முறைகளையும் தெரிந்துகொண்டிருக்கமாட்டோம்.

(12-ம் பக்கம் பார்க்க)

சரித்திரச் சிதறல்

அழகி ஆர்மீனா

[பா. வரதன் கலைவ.]

மன்னாதி மன்னர்களையும் மண்ணிலே மண்டியிட்டுப் பணியச் செய்த மாவீரன் அலெக்சாண்டர், மிகுந்த மனக்கவலையோடு ஜீலம் நதியின் மேல்கரையிலே உலாவிக்கொண்டிருந்தான். அவனுடன் நின்றபடைத் தலைவன் செலூகசும் சிந்தனை அலைகளிடையே மிதந்தவனாகக் காணப்பட்டான். எதிர்க்கரையிலே அஞ்சாநெஞ்சுடை போரஸின் பெரும் படை அணிவகுத்து நின்றது. அதில் உள்ள களிறுகள் பிளிறும் ஓசை, ஜீலம் நதியின் அலைகடலோசையையும் சிறிதாக்கி அலெக்சாண்டரின் காதுகளைத் துளைத்தது. அலெக்சாண்டரின் ஆழ்ந்த பார்வை ஜீலம் நதியின் ஆழத்தையும் அகலத்தையும் அளப்பதுபோல ஊடுருவிப் பாய்ந்தது. நிமிர்ந்த பார்வையிலே, நீள் உலகையும் பணியச்செய்துவிடலாம் என்று மனக்கோட்டை கட்டிய மன்னன், ஜீலம் நதியிலே கரைபுரண்டோடும் வெள்ளத்தைக் கண்டு கலங்கி நின்றான்.

"அரசே, தாமதிப்பதில் பலனில்லை; தாக்குதலை ஆரம்பிக்க வேண்டியதுதான்."

"செலூகஸ்! அவசரப்படாதே; ஆற்றைக் கடப்பது அவ்வளவு எளிதல்ல; அக்கரை சேர்ந்த நம் படையை துண்டிக்க எதிரிகள் முயலக்கூடும். அதைத் தடுக்கும் வழி வகையை வகுக்குமுன், நாம் எந்த முடிவுக்கும் வரமுடியாது."

சேனாதிபதி செலூகஸ்பலத்த சிந்தனையிலாழ்ந்தான். அலெக்சாண்டர் பின்புறம் கைகட்டிய படியே மீண்டும் சிந்திக்கத் தொடங்கினான்.

"அரசே எதிர் முகாமில் ஏராளமான யானைகள் இருப்பதாகவும் தெரியவருகிறது."

"இருக்கட்டுமே, கிரேக்க குதிரை வீரர்களின் முன் அவையெல்லாம் சிதறி ஓடிவிடும், செலூகஸ்."

"ஆனால் யானைப்படையுடன் போரிட்டு நம்வீரர்கட்கு பயிற்சி கிடையாதே என்றுதான் அச்சுறுகிறேன்."

"நடைபெறப் போகும் போரிலே அந்தப் பயிற்சியை நம் வீரர்கள் பெறுவார்கள்."!

அகில உலகையும் ஆட்டிப் படைக்க எண்ணிய வெற்றி வீரன் அலெக்சாண்டரின் மமதை, பதிலிலே ஒலித்தது.

"செலூகஸ், நமது படைகள் நதியைக் கடக்கும் வரையில், எதிரிகளின் தாக்குதல் நடைபெறாதிருந்தால், வெற்றி நிச்சயமாக நம்முடையதுதான். ஆனால், அதற்கு ஓரிரவு அவகாசம் வேண்டும்; அதை மட்டும் அடைந்துவிட்டால........"

செலூகஸ் பதில் பேசவில்லை. அவகாசம் அடையும் வழியை அறிந்து சொல்லமுடியாததனால் அவன் வாயடைத்து நின்றான் போலும். மெல்ல மெல்ல இருளும் தன் அகண்ட கரங்களை நீட்டி உலகினை அணைக்கத் தொடங்கியது. எங்கும் இருள் சூழ்ந்தது. மன்னனும், படைத் தலைவனும் பாசறையை நோக்கிப் புறப்பட்டார்கள், எந்த விதமான முடிவுக்கும் வாராமல்.

ஆர்மீனா கிரேக்க நாட்டு அழகி. அலெக்சாண்டரின் அந்தப் புரத்தை அழகு படுத்திய அணங்குகளில் ஒருத்தி. கி. மு. மூன்று நான்காம் நூற்றாண்டிலே, கிரேக்க மன்னர்கள் கலையைப் போற்றி, கலைஞர்கட்கு மிக்க மரியாதை செய்தனர் நாட்டியம், கலை வல்ல கவினுறு காரிகையர்களை அரண்மனையின் அழியாச் செல்வமாகக் கருதினான் அலெக்சாண்டர். மாண்ட தந்தையின் மனோரதத்தை நிறைவேற்ற, மாசிடோனியா மன்னன் அலெக்சாண்டர் தன் பரிவாரங்களுடன் புறப்பட்டபோது இந்தப் பாவையரையும் தன்னுடன் அழைத்து வந்தான். அவர்களில் ஆர்மீனாவும் ஒருத்தி.

பொங்கிய கடலினின்றும் பூரித்தெழும் பூரண சந்திரனைப் போல உருட்சியும் திரட்சியும் பிரகாசமும் பொருந்திய முகம்; நீண்ட கருங் கூந்தல், வளைந்தோடி நிற்கும் புருவம், அதன் கீழ் ஓடித்திரும்பும அகன்று நீண்ட கண்கள், அலையெனப் பாவும் கைகள். அசையும் தளிரன்ன உடல். அவள்தான் ஆர்மீனா. ஆர்மீனா, அவனது காதல் கனி. கலைக்கற்பகமாகவே கருதினான் அவளை. போரிலே எதிரிகளைப் புறங்காட்டச் செய்த போதும், புதுப் புது அரசுகளை அடிமைகொண்ட போதும், மன்னர்களின் மகுடங்களை மண்ணிலே உருட்டிய போதும், வெற்றி விழாக்களிலே அழகி ஆர்மீனாவின ஆட்டத்தையே பிரதம பாகமாக்கி களிப்பான் அலெக்சாண்டர். உள்ளம் ஊசலாட மன அமைதியின்றி எந்த முடிவுக்கும் வாராமல் தவித்த மன்னன், சிந்தனை தெளிய, ஆர்

மீனா நாட்டியம் ஆடவேண்டுமென்று விரும்பினான். கலையே உருவெடுத்துக் களிநடனம் புரிந்தது! ஆனால் காவலனின் உள்ளம் மட்டும் களிக்கவில்லை; கரைபுரண்டோடும் வெள்ளத்தின் காட்சியே கண்முன் தோன்றியது. கரையைக் கடக்கும் தந்திரத்தைக்கணத்துடித்தது உள்ளம். ஆயிரமாயிரம் போர்களுக்கு திட்டம் வகுத்த தளபதி, அகில உலக அரசு காண போர்க்கோலம் பூண்ட பூபதி, போரஸ்மன்னனைப்போரில் வெல்லும் மார்க்கமறியாது மனங்கலங்கி நின்றான்.

காவலன் உள்ளம் களிப்படையாதது கண்டு மனம் வருந்தினாள் ஆர்மீனா. அலெக்சாண்டர் அவளையே இமை கொட்டாமல் பார்ததுக் கொண்டிருந்தான். திடீரென்று மன்னன் முகம் அன்றலர்ந்தசெந்தாமரை போல மலர்ந்தது!

"செலூகஸ்!"

தளபதி வணங்கி நின்றான்.

"படைகள் ஆற்றைக் கடக்கட்டும். படகுகளைச் சேர்த்துக் கட்டிப் பாலமாக மிதக்கவிடு. நள்ளிரவில் படைகள் கடக்கட்டும் நதியை. பொழுது புலரும் பொழுது, போரஸ் புறமுதுகிடும்படி தாக்குதல் நடக்கவேண்டும்!"

அகமும் முகமும் மகிழும் அலெக்சாண்டரை ஆவலுடன் பார்த்தான் தளபதி.

"செலூகஸ்! போரஸ் கலைப் பித்தனல்லவா?"

மன்னனின் கேள்விக்குப் பொருள் தெரியாமல் திகைத்து நின்றான் கிரேக்கத் தளபதி.

"தளகர்த்தா, எனது கேள்வி புரியாத புதிராகத்தான் இருக்கும்; போர் முடிந்து போரஸ் கைது செய்யப்பட்டு நம்முன் கொண்டுவந்து நிறுத்தப்படும்போதுதான் எல்லாம்தெளிவாக விளங்கும்!"

தன் திட்டத்திலே அபார நம்பிக்கை அலெக்சாண்டருக்கு

பகலெல்லாம் ஆடிப்பாடிய பறவைகள் அயர்ந்து இருக்கும் நேரம். எங்கும் அமைதி நீக்கமற நிசப்தம் நிறைந்திருந்த நேரம்! நள்ளிரவு நெருங்கும் நேரம்! ஜீலம் நதியின் கீழ்க்கரையிலே, புரவியின் மீது சவாரிசெய்து வருகிறான் ஒருவீரன். அவனைத் தொடர்ந்து இரு போர்வீரர்கள் சவாரி செய்துவருகிறார்கள். அவர்கள் மூவரும் ஆற்றில வரும் படகையும், அதில் வீற்றிருக்கும் பாவையையும் கவனிக்கின்றனர். படகு கரையை அடைகிறது. அதிலிருந்து ஒரு அணங்கு மட்டும் கீழே இறங்குகிறாள். வீரன் அவளை நெருங்குகிறான். அந்த இரவில் மங்கலான வெளிச்சத்தில் கூட அந்த மங்கையின் அழகு பிரகாசிக்கிறது.

"நீ யார்?"

"நான் ஓர் கிரேக்கப் பெண்!"

"நடுநிசியிலே, போர்க்காலத்திலே, தன்னந்தனியாக படகோட்டி வந்த காரணம்........?"

"போர் போர் என்று போர்களைப் பார்த்து அலுத்த என் உள்ளம், இயற்கையிலே இன்பங் காணவிழைந்தது!"

மதுரமான மொழிகளை சாதுரியமாக அள்ளி வீசினாள் அவ்வழகி. வீரனும் ஒரு கணம் திகைத்தான்.

"இவளைப் பாசறைக்கு கூட்டிக்கொண்டுபோய் பத்திரமாக காவலில் வையுங்கள்", என்று உத்தரவிட்டு வீரன் தன் வழிமேல் விழி வைத்து நடந்தான. போர்வீரர்கள் இருவரும் கிரேக்க யுவதியை அழைத்துச் சென்றனர்.

அரண்மனையில் அமைச்சர்களும், தளபதிகளும் புடைசூழ போரஸ் வீற்றிருந்தான். ஆற்றங்கரையில் கண்ட அழகி போரஸின்முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டாள். ஆசியா மைனரை அடிமைப்படுத்தி பாரசீகத்தைப் பணிந்திடச் செய்த அலெக்சாண்டரின் அபிமான அணங்கு ஆர்மீனா, போரஸின்முன் கைதியாக நின்றுகொண்டிருந்தாள்.

மன்னனின் முகத்தை நோக்கினாள் மங்கை! திகைத்தாள். ஆற்றங்கரையில் அவள் கண்ட வீரன் போரஸ் மன்னன்தான்!

"திகைக்கிறாயா? எனது போர்த் தந்திரங்களில் இதுவும் ஒன்று. சரி! உன்னைப்போல ஒற்றர் வேலைசெய்யும் மெல்லியலார் இன்னும் எவ்வளவுபேர் கிரேக்க மன்னனிடம் இருக்கிறார்கள்!"

"அரசே அரசியலில் அலுத்த மாவீரன் அலெக்சாண்டருக்கு கலைமூலம் களிப்பூட்டுவதைத் தவிர வேறொன்றுமறியேன்."

கலை என்று காரிகை கூறியவுடனே போரஸின் கண்கள் ஆர்வத்தால் விரிந்தன! ஆர்மீனாவின் நடிப்பும் அதிதத்ரூபமாக இருந்தது! மன்னனின் மனப்போக்கை சுலபத்திலே புரிந்துகொண்ட கலையரசி, அங்கங்களை அற்புதமாக நெளித்து கலைக்கூத்தாடினாள்.

அழகி ஒருத்தி, அமைதியான இரவிலே, கார்மேகத்தைக் கண்ட களிப்பின் மிகுதியால் கானமயில் சிறகு விரித்தாடுவதைப் போல அதிஅற்புதமாக ஆடினாள். போர்வீரர்களையே பார்த்துப் பார்த்து பூத்துப்போன அவன் கண்களுக்கு, கிரேக்க நாட்டு அழகி ஆர்மீனாவின் நடனம் கண்களுக்கு நல்ல விருந்தாக அமைந்தது! களிப்பில் திளைத்தனர் காவலனும் மற்றையோரும்; ஆர்மீனா ஆடிக்கொண்டே இருநதாள்!

அலெக்சாண்டரின் திட்டம் அற்புதமாக நிறைவேறியது.

(14-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

திராவிடர் வார இதழ்

சென்னை 19—4—52 சனிக்கிழமை

திராவிடமே! ஆரியத்தைப் பார்!

அஹா! அல்லாடியைத்தானே குறிப்பிடறேள்! அற்புதமான சட்ட ஞானம் படைத்தவராச்சே அவர்!" என்று கல்கி கிருஷ்ணமூர்த்தி அய்யர் புகழ்மாலை சூட்டுவார்.

அதே நேரத்தில். "கிருஷ்ணமூர்த்தி" அய்யரின் கல்கி ஏடு இருக்கே! அதற்கு இணையான பத்திரிகை வேறு ஏது? என்றேன்!" என்று பாராட்டுமடல் வாசிப்பார் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்.

அரியக்குடி ராமாநுஜ அய்யங்காரின் இசைப் புலமையைப் பாராட்டி "ஹிந்து" சீனிவாச அய்யங்கார், தன் பத்திரிகையில் ஏழு கலம் மதிப்புரை எழுதுவார்.

அதுபோலவே ஹிந்து பத்திரிகையின் அபாரமான செல்வாக்கைப் பற்றிப் போகிற ஊரில் எல்லாம் திண்ணைக் கச்சேரி வைப்பார், அரியக்குடி அய்யங்கார்.

வ. ராமசாமி அய்யங்காரின் பேனாமுனையை வானளாவ உயர்த்திப் பேசுவார் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்.

இராஜகோபாலாச்சாரியாரின் அரசியல் மேதையைப் பற்றிப் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளுவார் வ. ரா. அய்யங்கார்.

சத்தியமூர்த்தி சாஸ்திரிகளின் பிரசங்கமாரி இருக்கே! பிரசங்கம்னா அது அல்லவா பிரசங்கம் என்பார் டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி.

வெங்கட்ராம சாஸ்திரி மாதிரி வேறொரு அட்வகேட் ஜெனரல் இந்த லோகத்திலேயே கிடையாதுன்னு என்று மோகனகீதம் பாடுவார் சத்தியமூர்த்தி சாஸ்திரி.

சஹஸ்ரநாமத்தின் நடிப்பின் திறமையை அற்புதம் அற்புதம் என்று போற்றுவார் டி.கே. ஸ்ரீனிவாச அய்யங்கார். ஸ்ரீனிவாச அய்யங்காரின் வேதஞானத்தை அடடாவோ அடடா என்று பாராட்டுவார் சஹஸ்ரநாமம்.

ஜெமினி ஸ்ரீனிவாசனைப்போன்ற அற்புதமான டைரக்டர் ஹாலிவுட்டிலே கூடக் கிடையாது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுவார் நடனமாது ருக்மணிதேவியார். ருக்மணி தேவியாரின் நாட்டியத் திறமையை வியந்து வியந்து பாராட்டுவார் ஜெமினி ஸ்ரீனிவாசன்.

பார்ப்பன இனத்தவர்கள், எண்ணிக்கையைப் பொறுத்த அளவிலே, நூற்றுக்கு மூன்று பேராக இருந்தாலும், நாட்டையும் சமுதாயத்தையும் ஆட்டிப் படைக்கும் ஆதிக்கத்திலே நூற்றுக்கு எழுபது என்பது என்கிற விகிதத்திலே பங்கு பெற்றிருக்கிறார்கள் என்றால், அதற்குக் காரணம், அந்த இனத்தவரிடத்திலே காணப்படும் இந்த அற்புதமான ஒற்றுமைதான்.

அரியக்குடியாருக்கும் அல்லாடியாருக்கும் சொந்தத்திலே ஆயிர தகராறுகள் இருக்கும். ஆனால் வெளியே அதைக்காட்டிக்கொள்ள மாட்டார்கள். அரியக்குடியாரை அல்லாடியார் புகழ்வார். அல்லாடியாரை அரியக்குடியார் பாராட்டுவார்.

கல்கி கிருஷ்ணமூர்த்திக்கும் ஜெமினி ஸ்ரீனிவாசனுக்கும் ஒரு பாரத யுத்தமே நடந்திருக்கிறது சொந்த வாழ்க்கையில்! ஆனால் பொதுவாழ்க்கையில் அதைக் காட்டிக் கொள்கிறார்களா அவர்கள்? ஜெமினியாரின் "சந்திரலேகா" ஜெயக்கொடி நாட்டுகிறது பாரீர் பாரீர் என்கிறார் "கல்கி" ஆசிரியர்! கல்கி ஆசிரியரின் "பார்த்திபன் கனவு" எவ்வளவு அற்புதம் காணீர் காணீர் என்கிறார் ஜெமினி உரிமையாளர்.

பார்ப்பன சமுதாயத்திலே உள்ள ஒவ்வொருவரும் தங்களை ஒரு பெரிய குடும்பத்தின் பல்வேறு உறுப்பினர்கள் என்றுதான் கருதுகிறார்களே தவிர, ஒருவருக்கொருவர் தொடர்பில்லாத தனித்தனி மனிதர்கள் என்று ஒருநாளும் கருதவதில்லை.

ஒரு பார்ப்பனர் மற்றொரு பார்ப்பனரைக் கண்டவுடனே. அன்னை மதலையைக் கண்டதுபோலவும், மதலை அன்னையைக் கண்டது போலவும் மகிழ்ச்சி அடைகிறார். இருவரும் ஒரே இனம் என்பதை எண்ணி எண்ணிப்பூரிப்படைகிறார். அவருக்கு உதவவேண்டியது தன்னுடைய கடமை என்பதையும் தனக்குக் கைகொடுக்க வேண்டியது அவருடைய பொறுப்பு என்பதையும் தன்னுடைய விழியாலும் மொழியின் எழிலாலும் அவருக்குச் சொல்லிக் காட்டிவிடுகிறார்.

பார்ப்பன இனத்தவரிலேயாரோ ஒருவருக்கு ஆபத்து என்றால் மற்ற பார்ப்பனர்கள் அத்தனைபேரும் ஓடோடிவருகின்றனர். தங்கள் தங்களுக்கே சொந்தத்தில் ஆபத்து நேரிட்டுவிட்டதுபோல எண்ணிப் பதைக்கின்றனர்.

சோஷலிஸ்ட் பார்ப்பனர் ஆர். எஸ். எஸ். ஆரியரைக் காணும்போது சீறிவிழமாட்டார். சௌக்கியமா சாஸ்திரியளே என்று குசலம் விசாரிப்பார். அதுபோலவேதான் தேசியப் பிராமணர் கம்யூனிஸ்ட் பார்ப்பனரைக்காணும்போது சற்றே விலகிரும் பிள்ளாய் என்று கூற மாட்டார். வாங்கோ வாங்கோ காம்ரேட் ராமமூர்த்தி என்றுதான் அகமும் முகமும் குழைய வரவேற்பார்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே! நம்மில் ஒற்றுமை நீங்கி

டில் அனைவர்க்கும் தாழ்வே!" என்ற பாரதி பாசுரத்தை எழுத்துக்கு எழுத்து பின்பற்றும் இனம் ஒன்று இருக்கிறது என்றால், அது பார்ப்பன இனம்தான்! ஆரிய வகுப்புதான்!

ஒருவரை ஒருவர் பாராட்டுவதன் மூலமாகத்தான் தங்கள் இனத்தவர்கள் எல்லோரும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற முடியும் என்கிற இரகசியத்தைப் பார்ப்பனர்கள் மிக நன்றாக உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

அல்லாடியைப் பாராட்டி கல்கி ஆசிரியர் தீட்டுகிற எழுத்தோவியத்தைப் பார்க்கிறபோது, பொதுமக்கள், கல்கியைப் போன்ற ஒரு சிறந்த எழுத்தாளரரே இவ்வளவு தூரம் பாராட்டுகிறார் என்றால் அல்லாடியாரின் சட்ட அறிவு உண்மையிலேயே ஒப்பற்றதாகத்தான் இருக்கும் என்று கருதத் தொடங்குகிறார்கள்.

அதுபோலவே, கல்கி ஆசிரியரின் கதைபுனை வல்லமையை அல்லாடியார் பாராட்டுவதைக் காண்கிற மக்கள், அல்லாடியே பாராட்டுகிறார் என்றால் கல்கியின் திறமைக்கு வேறென்ன சாட்சி தேவை என்று கருதி, கல்கியாரை மிக உயர்ந்த இடத்துக்கு ஏற்றிவிடுகிறார்கள்.

இங்ஙனமாக கல்கியாரை அல்லாடியார் புகழ்வதன் மூலம், அல்லாடியாரை கல்கியார் பாராட்டுவதன் மூலம், இரண்டு பேரும் கூட்டாகச் சேர்ந்துகொண்டு, பொதுமக்களை ஏமாற்றி, தங்கள் இருவருக்கும் நியாயமாகக் கிடைக்கவேண்டியதைவிட நூறு மடங்கு அதிகமான புகழையும் செல்வாக்கையும் நிலைநாட்டிக்கொண்டுவிடுகிறார்கள்.

இந்தக் காரணத்தால்தான் வேறு சமுதாயத்தில் பிறந்திருந்தால் மிகச் சாதாரண மனிதர்களாகக் காட்சி அளித்திருக்கக் கூடியவர்களெல்லாம்கூட, பார்ப்பன இனத்தில் உதித்துவிட்டபோது மிகப் பெரிய மனிதர்களாகவும் அதி அற்புதமான அறிவாளிகளாகவும் ஜொலிக்கத் தொடங்கிவிடுகிறார்கள்.

சர் ஆற்காடு இராமசாமி முதலியாருடன் ஒப்பிடுகிறபோது இராஜகோபாலாச்சாரியார் மிக மிகச் சாதாரண மனிதர்; ஆனால் கீர்த்தியும் பலமும் செல்வாக்கும் சிறப்பும் ஆச்சாரியாருக்குத்தான் அமோகம்.

சர் ஆர். கே. சண்முகம் செட்டியாரின் அறிவும் ஆற்றலும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் அறிவாற்றல்களைவிட ஆயிரம் மடங்கு அதிகம். ஆனாலும் கிருஷ்ணமாச்சாரியாரின் புகழ்தான் திக்கெட்டிலும் ஒலிக்கிறது. ஆர். கே. எஸ். அவர்களின் விலாசத்தைத் தேடிக்கண்டுபிடிப்பதே சிரமமான காரியமாக இருக்கிறது.

டாக்டர் குருசாமி முதலியாரின் மருத்துவத் திறமையுடன் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் என்னும் அய்யங்காரின் திறமையை ஒப்பிட்டுப் பார்த்தால் முன்னவர் சூரியனாவார். பின்னவர் மின்மினியாவார். ஆனாலும் செல்வாக்கு, முன்னவருக்கு பூஜ்யம்! பின்னவருக்கோ, அமோகம்!

திராவிட வழக்கறிஞர் எதிராஜுடன் ஆரிய வக்கீல் அல்லாடியாரை ஒப்பிட்டால் அல்லாடியார்தான் சற்று தாழ்ந்த நிலை பெறுவார். ஆனால், நாட்டிலேயோ அல்லாடி என்றால் அனைவருக்கும் தெரிகிறது! எதிராஜ் என்றால் யார் அவர் என்று கேட்கிறார்கள் மக்களிலே பலர்.

பார்ப்பன இனத்தவர் ஒவ்வொருவரும் தங்கள் இனத்தைச் சேர்ந்த ஏனையோரைத் தாராளமாகப் பாராட்டுவார்கள். ஏராளமாகப் புகழ்வார்கள். அதனால்தான் அந்த இனத்தைச் சேர்ந்த எல்லோரும் தங்கள் தங்கள் தகுதிக்கும் திறமைக்கும் சிறிதளவும் தொடர்பில்லாத மிக உயர்ந்த செல்வாக்கும் புகழும் பெற்றுத் திகழ்கிறார்கள்.

திராவிட இனத்தவர்களோ தங்கள் இனத்தைச் சேர்ந்த ஏனையோரைத் தூற்றுவதையே தங்கள் பிறவிப் பணியாகவும் அரும்பெருந் தொண்டாகவும் கொள்கிறார்கள். ஆகையால்தான் அந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் தாம்தாம் பெற வேண்டிய இடத்தையும் புகழையுங்கூடப் பெறமுடியாமல் படுபாதாளத்தில் வீழ்ந்து தவிக்கிறார்கள்.

ஆரிய இனத்தவருக்கிடையே காணப்படுகின்ற அற்புதமான கட்டுப்பாட்டுக்கும் ஒற்றுமைக்கும் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொள்ளும் தன்மைக்கும் இதோ ஒரு சிறந்த எடுத்துக்காட்டு!

சென்னை சட்ட மன்றத்தின் மேல்சபைக்கு அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிலே கே. பால சுப்பிரமணிய அய்யர் என்பவர் ஒருவர்.

அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக அவரைப் பாராட்ட, ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றிருக்கிறது, சென்னையில், 7-4-52 அன்று!

கூட்டம் நடைபெற்ற இடம் எது தெரியுமோ? **மைலாப்பூர்!** அதாவது சென்னை நகரின் அக்ரகாரம்!

மைலாப்பூரில் எந்த மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றிருக்கிறது என்பது தெரியவேண்டுமா? **சமஸ்கிருத கல்லூரியின்** மண்டபத்தில்! அதாவது, "அவாள்" கல்லூரி மண்டபத்திலேயே!

பாலசுப்பிரமணிய **அய்யருக்குப்** பாராட்டுத்தாள் வாசித்துத் தந்திருப்பவர்கள் யார் யார் தெரியுமா? பாருங்கள் அந்தப் பட்டியலை!

சென்னை **சமஸ்கிருத** காலேஜ், மயிலாப்பூர் **சமஸ்கிருத** கழகம், குப்புசாமி **சாஸ்திரி** ஆராய்ச்சிக் கழகம், **சமஸ்கிருத** காலேஜ் பழைய மாணவர் சங்கம், இத்யாதி இத்யாதி! அதாவது, எல்லாம் "அவர்கள்" மயம்!

இனி, அய்யரைப் பாராட்டிப் பிரசங்கமாரி பொழிந்தவர்களின் பெயர் வரிசையைப் பார்க்க ஆசைப்படுகிறீர்களா? இதோ அந்த திவ்ய சொரூபிகளின் திருநாமங்கள்.

வி. வி. ஸ்ரீநிவாச **அய்யங்கார்,**
டி. ஆர். வெங்கட்ராம **சாஸ்திரிகள்,**
அல்லாடி கிருஷ்ணசாமி **அய்யர்,**
என். ரகுநாத **அய்யர்.**

ஒருவேளை நன்றியுரை நவின்றவர்களாவது திராவிட இனத்தவராக இருப்பார் என்று கருதுகிறீர்களா? அதுவுமில்லை! வந்தனோபசாரம் வழங்கியவர் பெயர் சாட்சாத் அனந்தகிருஷ்ண **சாஸ்திரிகள்.**

இந்த ஸ்ரீலஸ்ரீகள் அத்தனையும், மேல்சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அய்யர்வாளின் அருமை பெருமைகளைப் பாராட்டியபிறகு மேற்கொண்டு என்னென்ன பொருள்களைப்பற்றி "உபன்யாசம்" புரிந்திருக்கிறார்கள் தெரியுமா?

ராஜாஜியின் திறமை
சமஸ்கிருதத்தின் மகிமை
வேதசாஸ்திரங்களின் அருமை
ஆரிய கலாசாரத்தின் மேன்மை

ஆகிய இந்தப் பொருள்களைப்பற்றி!

இந்த அற்புதமான கூட்டத்தின் அருமையான நிகழ்ச்சிகளை அழு

(16ம் பக்கம் பார்க்க)

சுதந்தர கீதம்!

சுதந்தரம்! சமத்துவம்! சகோதரத்துவம்! என்கிற இலட்சிய முழக்கத்தை மனித சமுதாயத்திற்கு அளித்த பொன்னாடு, பிரான்ஸ்.

சுதந்தரம் மனிதனின் பிறப்புரிமை என்கிற உரிமை முரசொலியை எழுப்பிய உத்தமன் ரூசோவை உலகுக்கு அளித்த உன்னத நாடு, பிரான்ஸ்!

எங்கெங்கே அக்கிரமம் கொடிகட்டி வாழ்கிறதோ அங்கங்கெல்லாம் எனது புரட்சிக்குரல் எழுந்தே தீரும் என்று சூளுரை புகன்ற அஞ்சா நெஞ்சன வால்டேரை ஈன்ற அழகிய நாடு, பிரான்ஸ்.

ராஜபரம்பரையின் ஆணவம், நிலப் பிரப்புக்களின் கொடுங்கோல் தர்பார், மதகுருக்களின் மமதை—இம் மூன்று அக்கிரமங்களையும் தூள் தூளாக்கிய பிரஞ்சுப் புரட்சியை நடத்திக் காட்டிய நன்னாடு, பிரான்ஸ்!

ஊருக்கு நல்லது செய்த உத்தமர்களையெல்லாம் அடைத்து வைக்க ஒரு பாஸ்டில் சிறையா என்று கொதித்து எழுந்து மக்கட் பட்டாளம் சிறைக் கதவை உடைத்து எறிந்த ஜூலை 14-ம் தேதியைத் திருவிழாவாகக் கொண்டாடும் திருநாடு, பிரான்ஸ்!

ஆனால் அதே பிரான்ஸ்தான், இன்றைய தினம், டுனீசியா நாட்டு மக்களின் சுதந்தர கீதத்தை ஒடுக்க முயலும் சிறுமைச் செயலைப் புன்னகை பூத்த முகத்துடனே புரிய முன்வந்திருக்கிறது.

ஆப்ரிக்க கண்டத்தில் உள்ள ஒரு சிறு நாடு டுனீசியா.

அந்தச் சிறு நாட்டை, பிரான்ஸ், நெடுங்காலமாகத் தன்னுடைய காலின் கீழ்ப் போட்டு மிதித்துத் துவைத்து நாசமாக்கி வந்திருக்கிறது. அந்த நாட்டைத் தன்னுடைய ஏகாதிபத்யப் பிடிப்பிலிருந்து விட்டு விட மறுக்கிறது.

எத்தனைக் காலத்திற்குத்தான் இந்தக் கொடுமையைப் பொறுத்துக் கொண்டிருப்பார்கள் டுனீசிய மக்கள்?

கொடுமை அதிகமானால் புழுவும் திருப்பித் தாக்கும் அல்லவா?

சில சமயங்களில் நீரிலும் நெருப்பின் தன்மை தோன்றும் அல்லவா?

அக்கிரமத்தின் அளவு எல்லை கடந்து போகுமானால், கோழையின் உடலிலும் சிம்மத்தின் இரத்தம் ஓடுவது உண்டல்லவா?

டுனீசிய மக்கள் கோழைகளும் அலலர். புழுக்களும் அலலர். வீரம் செறிந்த உள்ளமும் திண்மை ததும்பும் தோள்களும் படைத்தவர்கள். தங்கள் தாய் நாட்டின் விடுதலைக்காக எத்தகைய தியாகத் தீயிலும் குதித்தெழத் தயார் என்று வீர முழக்கமிடும் தீரர்கள். அஞ்சா நெஞ்சமும் அரிய ஆற்றலும் படைத்தவர்கள்.

டுனீசியா, டுனீசியர்களுக்கே!— இந்த வீர முழக்கத்தை அவர்கள் சென்ற சில ஆண்டுகளாக எழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள்.

டுனீசிய நாட்டின் மீது பிரஞ்சு ஏகாதிபத்தியம் கொடுங்கோல் தர்பார் செலுத்திக் கொண்டிருப்பதை இனியும் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம் என்று திட்டவட்டமாக அறிவித்துவிட்டார்கள்.

"இந்தியாவை விட்டு பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் வெளியேறிவிடவில்லையா? மகத்தான ஆற்றல் படைத்த பிரிட்டிஷ் ஏகாதிபத்யமே வெளியேறிவிட்டபோது சுண்டைக்காய் அளவுள்ள நீ மட்டும் இன்னமும் இங்கே இருந்து கொண்டு ஆதிக்கம் செலுத்த எண்ணுகிறாயே—நடக்குமா?" என்று டுனீசிய மக்கள், பிரஞ்சு ஏகாதிபத்ய அரசாங்கத்தைப் பார்த்து அதட்டிக் கேட்கும் கட்டம் உருவாகிவிட்டது.

டுனீசியா எங்கணும் புரட்சிப் புயல்! மக்கள் சொற்களிலெல்லாம், "பிரஞ்சு ஏகாதிபத்யமே வெளியேறு" என்கிற கொதிப்புணர்ச்சி! இளைஞர்கள் உலகிலே ஆத்திரம், புரட்சி, ஆர்வ அலைகள், சுதந்தர ஆவேசம்! டுனீசியா, குமுறுகிறது-கொந்தளிக்கிறது—பிரஞ்சு ஏகாதிபத்யத்தை வெளியேற்றிவிட்டு, தன் நாட்டைத் தானே ஆளவேண்டுமென்று துடிதுடிக்கிறது.

வேற்று நாட்டவரால் அடக்கி ஒடுக்கி அடிமைப் படுத்தப் பட்டுக் கிடக்கும் எந்த நாடும், ஒரு நாள் இல்லாவிட்டால் மற்றொரு நாள், உடனே இல்லாவிட்டால் சிறிது காலம் பொறுத்து, சுதந்தர கீதத்தை எழுப்பி, விடுதலைப் போராட்டத்தை நடத்தி, வெற்றிப் பாகைத்தை வாசித்தே தீரும்.

இது, சரித்திரம் பேசும் உண்மை. இந்த உண்மையை, வால்டேரையும் ரூசோவையும் உலகுக்கு அளித்துள்ள பிரான்ஸ், அறியாமலிருக்க முடியாது.

என்றாலும் பிரஞ்சு அதிகார வர்க்கம், டுனீசிய மக்களின் விடுதலைப் போராட்டத்தை அடக்குமுறை ஆயுதத்தால் அழித்துவிட முயல்கிறது. அழித்துவிட்டு, என்றென்றும், டுனீசியாவில், தன்னுடைய ஏகாதிபத்தியக் கொடியை உயர்த்திப்பிடிக்க மனக்கோட்டை கட்டுகிறது.

மக்களின் எழுச்சிக் கீதத்தை அடக்கும் சக்தி, அடக்குமுறை ஆயுதத்திற்கு ஒருநாளும் கிடையாது என்பதைப் பிரஞ்சுநாட்டு வரலாற்றில் பிரஞ்சு மன்னன் லூயி தன் தலையைப் பறிகொடுத்த சம்பவமே தெளிவாக எடுத்துச் சொல்கிறது.

அடக்குமுறை வெறியாட்டம் ஆடுவதில் அவர்களுக்கு உள்ள அளவற்ற ஆர்வம் காரணமாகத் தங்கள் சொந்த நாட்டு வரலாற்றைப் படிப்பதற்குக் கூடப் பொறுமை இல்லை போலிருக்கிறது பிரஞ்சு அதிகார வர்க்கத்திற்கு.

அதனால்தான் போலும் டுனீசிய மக்கள் மீது கொடுமையான அடக்குமுறைப் பாணங்களை அள்ளி அள்ளி வீசுகின்றனர்.

டுனீசியாவில் இப்பொழுதுள்ள மந்திரிசபை விடுதலை முரசைக் கொட்டும் எழுச்சிக் காரியத்தைப் புரிந்து கொண்டிருக்கும் காரணத்தால் அந்த மந்திரிசபையை டிஸ்மிஸ் செய்யவேண்டுமென்று, டுனீசிய மன்னருக்குக் கட்டளையிட்டது பிரஞ்சு ஏகாதிபத்யம்.

அந்தக் கட்டளையைக் கண்ட பிறகும் காணாததுபோல மவுனம் சாதித்துவிட்டார் டுனீசிய மன்னர்.

பிரஞ்சு ஏகாதிபத்யத்தின் கட்டளைப்படி பொதுஜன மந்திரிசபையை டிஸ்மிஸ் செய்தால், டுனீசிய மக்களின் ஆத்திரமும் ஆவேசமும் தன் மீது பாய்ந்துவிடும் என்பது அவருக்குத் தெரியும்.

ஆகவேதான் அவர், "என்னால் ஆவது யாதொன்றுமில்லை பராபரமே" என்று கையைக் கட்டிக் கொண்டு வாளாஇருந்துவிட்டார்.

மன்னர் தங்களுடைய கைப்பாவையாக இருக்க மறுக்கிறார் என்பது தெரிந்ததும், பிரஞ்சு அதிகார வர்க்கத்தினர், டுனீசியாவின் பிரதம மந்திரியையும் ஏனைய மூன்று மந்திரிகளையும் திடீரென்று கைது செய்து எங்கோ கண் காணாத இடத்திற்குக் கொண்டு சென்று விட்டனர்.

அமெரிக்காவுக்குப் போவதற்காகப் பிரான்சுக்குச் சென்று பாரிஸ் நகரில் தங்கியிருந்தனர் டுனீசிய மந்திரிகளில் இரண்டு பேர்.

அவர்களை பாரிஸ் நகரிலேயே கைது செய்துவிட்டது பிரஞ்சு அரசாங்கம்.

டுனீசிய மக்களில் ஆயிரக் கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

ஊரடங்கு சட்டம் நாடு முழுவதும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது

மிகவும் கொடுமையான அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது

என்றாலும் டுனீசியாவின் விடுதலைப் போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்று, மேலும் மேலும் வளர்ந்து வருகிறது.

இன்றில்லாவிட்டால் நாளை, நாளை இல்லாவிட்டால் மற்றோர் நாள், டுனீசியா தன் விடுதலைப் போராட்டத்தில், வெற்றி பெற்று பிரஞ்சு ஏகாதிபத்யத்தை வெளியேற்றியே தீரும்.

உலக வரலாறு அளிக்கும் பாடம் இது.

சென்னை மாவட்ட தி.மு. கழகம்.

பயிற்சி வகுப்பின் அழைப்பு.

13—4—52-ந் தேதி நடைபெற்ற சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகக் கமிட்டியின் தீர்மானத்திற்கேற்ப மே மாதம் 11-ந் தேதி முதல் 31-ந் தேதிவரை தினசரி சொற்பயிற்சி வகுப்பு நடத்த ஆவன செய்யப்பட்டு வருகின்றன. வகுப்பில் சேர விரும்பும் மாணவர்களும், இயக்கத் தோழர்களும், அந்தந்த வட்டத் தி. மு. கழகச் செயலாளர் கையெழுத்துடன் கூடிய மனுவை ஏப்ரல் 30-ந் தேதிக்குள் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

வயது, படிப்பு அல்லது தொழில், முழு முகவரி ஆகிய விவரங்கள் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளர்களும், நிர்வாக உறுப்பினர்களும் இவ் வகுப்பில் பயிற்சி பெறுவது அதிக பயன் தரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்,—என். வி. என். செயலாளர்.

பயிற்சி வகுப்பில் சேருவோர் கீழ்கண்ட முகவரிக்கு, மனுவை தபாலிலோ, நேரிலோ அனுப்பி விடவும்.

ம. சு. முத்தையா, அமைப்பாளர்.
(தி. மு. க. சொற்பயிற்சி வகுப்பு)
8, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு,
ஏழுகிணறு சென்னை—1.

போர்வாள்

சந்தா விவரம்

ஓராண்டு	ரூ. 6—8—0
6 மாதம்	ரூ. 3—4—0

போர்வாள் அலுவலகம்
131, பிராட்வே, சென்னை-1.

இந்தப் பாடத்தை பிரான்ஸ் விரைவிலே படித்தறிந்து கொள்வது நல்லது.

இல்லையானால், பிரான்ஸ்நாட்டின பெயர் மீது என்றும் அழியாத மாசு படிந்துவிடுவது உறுதி.

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மனிதன் முயன்றால் எதையும் செய்ய முடியும் என்கிற பகுத்தறிவுத் தத்துவத்தை நம்பிய காரணத்தால்தான் மனிதசமுதாயம், காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்து நந்நாகரிக வாழ்க்கைவரை முன்னேறி வந்திருக்கிறது. "நம்மால் என்ன ஆகும் — எல்லாம் அவனால்தான் ஆகும்" என்கிற வறட்டு வேதாந்தத்தை நம்பி, பிரார்த்தனை புரிவது ஒன்றையே தன்னுடைய ஒரு பெரும் பணியாகக் கொண்டிருந்தால், மனிதன், இன்னமும், அடர்ந்த காடுகளிலே, ஆடை அணிகலன்களின்றி, நாகரிகம் நல்வாழ்வு என்பதின்றி, வாலில்லாக் குரங்காகத்தான் உலவிக்கொண்டிருப்பான். நாடும் நகரமும், சட்டசபையும் எம். எல். ஏ பதவியும், ஆட்சி முறையும் பல்கலைத் தெளிவும் பெற்றுள்ள இன்றைய நிலையை எய்தியிருக்கமாட்டான்.

எந்த அளவுக்கு பிரார்த்தனையை மனிதன் கைவிட்டானோ, எந்த அளவுக்கு எல்லாம் கடவுள்செயல் என்கிற பொய்ம்மை தத்துவத்தை புரட்டி எறிந்தானோ, எந்த அளவுக்குத் தன் முயற்சியில் தளராத நம்பிக்கைவைத்தானோ, அந்த அளவுக்குத்தான் மனிதன் முன்னேறியிருக்கிறான்.

மனிதனை முன்னேறவொட்டாது தடுக்கும் முட்டுக்கட்டை பிரார்த்தனை, முற்போக்குப் பாதைக்கு மனிதனைக் கைபிடித்து இழுத்துச் செல்லும் சிறந்த வழிகாட்டி, விஞ்ஞானம்.

பிரார்த்தனை; விஞ்ஞானத்தின் எதிரி, பகுத்தறிவின் பகைவன். முற்போக்குக்கு முட்டுக்கட்டை. மனிதசமுதாயத்தின் நல்வாழ்வுக்கு விரோதி.

அத்தகைய பிரார்த்தனையை நம்புகிறார் ஆச்சாரியார்! அவர் நம்புகிறாரோ இல்லையோ, நம்மையெல்லாம் நம்பச் சொல்கிறார்! பிரார்த்தனையால்தான் சகல பிரச்சினைகளும் தீரும் என்கிறார்!

நாம் கேட்க விரும்புகிறோம், பிரார்த்தனையால்தான் சகல பிரச்சினைகளும் தீரும் என்பது மெய்யானால் சட்டசபை எதற்காக இருக்க வேண்டும்? வெறும் பஜனை மடம் இருந்தால் போதுமே! மந்திரிசபை ஏன் அமையவேண்டும்? திருவாசகம் பாடத் தெரிந்த கிருபானந்தவாரிகள் பத்துப்பேர் கொண்ட ஒரு பக்தர் சபை அமைந்தால் போதுமே! சட்டப் புத்தகங்கள்—வழக்கு மன்றங்கள்—கல்விச்சாலைகள்—ஆஸ்பத்திரிகள்—சிறைக்கூடங்கள்—நாட்டாண்மை நகராண்மைக் கழகங்கள் இவைகளெல்லாம் ஏன இருக்கவேண்டும்? பகவத்கீதை—ராமாயண பாரத ஏடுகள்—பஜனை மண்டபங்கள்—உருத்திராட்ச மாலைகள்—விபூதி மடல்கள்—நாமக் கட்டிகள்—தாளக் கருவிகள் இவைமட்டுமே போதுமே!

பிரார்த்தனை புரிவதன் மூலம்தான் நம்முடைய பிரச்சினைகளெல்லாம் தீரும் என்றால் நம்முடைய பிரச்சினைகள் எந்தக்காலத்திலேயோ தீர்ந்துபோயிருக்கவேண்டுமே! ஆனால் தீரவில்லையே, ஏன்?

நாமென்ன இதுவரை பிரார்த்தனை செய்யாமலா இருந்திருக்கிறோம்?

கோயில்களைக் கட்டி கும்பாபிஷேகங்களை நடத்தாமலா இருந்திருக்கிறோம்?

தினம் தினம் ஆண்டவனை வழிபடாமலா இருந்திருக்கிறோம்?

தேரும் திருவிழாவும் நடத்தாமலா இருந்திருக்கிறோம்?

ஆண்டவன்தான் நம் மக்களை அடியோடு மறந்துவிட்டாரே தவிர நம்மக்கள் ஒருநாளும் ஆண்டவனை மறந்தது கிடையாதே!

எதற்கெடுத்தாலும் பிரார்த்தனை புரியத் தவறியது கிடையாதே!

காஞ்சிபுரம் கருடசேவை, திருஒற்றியூர் தேர் உற்சவம், மயிலாப்பூர் அறுபத்துமூவர், பழனியாண்டவர் பாலாபிஷேகம் என்று உள்ள எந்த விழாவையும் மக்கள் மறந்தது கிடையாதே!

கால்வயிற்றுக் கஞ்சிக் குடிக்கக் கால்காசு கையில் இல்லாவிட்டாலும் கற்பூரம் வாங்கி கொளுத்தி அந்த ஜோதியிலே ஆண்டவனின் திரு உருவைக் கண்டு மகிழாமல் இருந்தது கிடையாது!

ஆழ்வார்கட்கும் நாயன்மார்கட்கும் இந்த நாட்டில் என்றுமே பஞ்சம் இருந்ததில்லையே!

நம் நாட்டிலே செய்யப்பட்டிருக்கிற அளவு பிரார்த்தனை உலகத்திலே வேறு எந்த நாட்டிலும் செய்யப்பட்டது கிடையாதே!

என்றாலும் நம்முடைய நாட்டிலே நெளிகிற அளவு வறுமையும் ஏழ்மையும் கல்வியறிவின்மையும் நோய்நொடியும் வேறு எந்த நாட்டிலும் கிடையாதே—ஏன்?

பிரார்த்தனை புரிவதன் மூலமாக எந்தப் பிரச்சினையாவது தீரும் என்பது உண்மையானால் நம்முடைய நாட்டின் எல்லாப் பிரச்சினைகளும் எப்போதோ தீர்ந்து போயிருக்க வேண்டும். ஏனெனில் நம் மக்கள் புரிந்திருக்கிற பிரார்த்தனை அவ்வளவு அதிகம்.

ஆனால் நம்முடைய பிரச்சினைகளோ இதுவரை ஒன்றுகூட தீர்ந்தபாடில்லை.

என்றாலும் ஆச்சாரியார் கூறுகிறார், பிரார்த்தனை மூலமாகத்தான் பிரச்சினைகள் தீரும் என்று!

எவ்வளவு தைரியம்! என்ன நெஞ்சழுத்தம்! பலப்பல நூற்றாண்டுகளாகப் பிரார்த்தனை செய்து செய்து, அலுத்து ஓய்ந்து, பிரார்த்தனை புரிவதால் பிரச்சினை எதுவும் தீரவில்லை என்பதைக் கண்டறிந்து, உள்ளம் குமுறியவர்களாய்க் கிடக்கும் மக்களைப் பார்த்து, பிரார்த்தனை புரியுங்கள்—பிரச்சினை தீரும் என்று கூறுகிறார் ஆச்சாரியார்! கூறலாமா? வெந்த புண்ணின் மீது வேல் கொண்டு குத்துவதுபோன்ற காரியம் அல்லவா இது?

பிரார்த்தனையே புரிந்தறியாத மக்களைப் பார்த்து ஆச்சாரியார் இப்படிக் கூறியிருப்பாரானால் அதை நாம் புரிந்துகொள்ள முடியும்.

ஆனால் பிரார்த்தனை செய்து செய்து அலுத்துப் போயிருக்கிற மக்களைப் பார்த்து இப்படிக் கூறுவதைத்தான் நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"விஞ்ஞான முறைகளைக் கையாண்டு கஷ்டப்பட்டு உலகத்தில் அநேகப் பொருள்களைச் சேர்க்கலாம். ஆனால் மழையைமட்டும் உண்டாக்க முடியாது. மழையை கடவுள் ஒருவர்தான் கொடுக்க முடியும்." என்று ஆச்சாரியார் பேசியிருக்கிறார் திருவல்லிக்கேணி கடற்கரையில்.

வானவூர்திமூலம் மேகங்களுக்கு மேலே பறந்துசென்று, சில குறிப்பிட்ட ரசாயனப் பொருள்களைத் தூவுவதன்மூலம், தேவையான இடத்தில், தேவையான அளவு மழையை வரவழைக்கும் முறையை நமக்குக் கண்டறிந்து தெரிவித்திருக்கிறது விஞ்ஞானம்.

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சோவியத் ரஷ்யா, சைனு போன்ற பல நாடுகளிலேயும் இந்த விஞ்

(16-ம் பக்கம் பார்க்க)

அரசியல் அலைகள்

ஐயையோ! நான் கிழவன்!!

காங்கிரஸ்காரர்களுடைய அகராதிப்படிப் பேசுவதானால் கொல்லைப்புற வழியாகச் சட்டசபைக்குள் நுழைந்து பிரதம மந்திரியாயிருக்கிறார் ஆச்சாரியார். சாதாரண தமிழ் அகராதிப்படி கூறுவதானால், பொது மக்களிடம் சென்று தேர்தலுக்கு நின்று அவர்களுடைய ஆதரவைப் பெறுவதன் மூலம் சட்டசபைக்குள் நுழையாமல் 'காங்கிரஸ் கவர்னருடைய கருணை கடாட்சத்தால் பிரதமராகிவிட்டார் மாம்பலத்து முனி புங்கவர். எந்த அகராதிப் படிப் பார்த்தாலும், ஆச்சாரியாருடைய செயல், ஜனநாயகக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்த நிலையில் பொதுமக்கள் ஆச்சாரியார்மீது கண்டனக் கணைகளை பொழியாமல் இருப்பார்களா? பொழிந்தார்கள். திக்கெட்டிலுமிருந்து பொழிந்தார்கள். ஆச்சாரியார் அச்சத்தால் நடுங்கி ஆயாசத்தால் வேதனைப்படும் அளவு பொழிந்தார்கள். அவ்வளவு கண்டனக் கணைகளையும் தாங்க முடியவில்லை போலிருக்கிறது அவரால்! 'ஐயையோ — நான் கிழவனாயிற்றே— என்னை இப்படியா தாக்குவது— கொஞ்சம் கருணை காட்டக்கூடாதா'' என்று பரிதாபக்குரல் எழுப்பியிருக்கிறார். சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில். பொதுமக்கள் என்ன ஏமாந்த சோணகிரிகளா? நீர்தான் கிழவனாயிற்றே! ஏனையா வந்தீர் ஆட்சிப் பீடத்திற்கு? உம்மால் தாங்க முடியுமா இந்தப்பாரத்தை?'' என்று பதிலுக்குப் பதில் கேட்கிறார்களாம்! கேட்காமல் எப்படி இருப்பார்கள்? ''நான் கிழவன்— ஆகையால் ஜனநாயகக் கோட்பாட்டை மதிக்கமாட்டேன்.'' நான் கிழவன்—எனவே, பொது மக்களின் தீர்ப்பை என் கால் தூசுக்குக் கூடச் சமமாகக் கருதமாட்டேன், ''நான் கிழவன்—ஆகையால் நான் எவ்வளவு அக்கிரமங்களைச் செய்தாலும் நீங்கள் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும்'' என்றெல்லாம் பொருள்படும் விதத்தில் ஆச்சாரியார் பேசுகிறார். இதை, யார்தானாகட்டும், எப்படித்தான் ஒப்புக்கொள்ளமுடியும்? ஐயையோ நான் கிழவன்—என்னைத் திட்டாதீர்கள் என்று ஆட்சிப் பீடத்தின் அலங்கார புருஷர் கூறினால், ''மீசை நரைத்துப் போச்சே கிழவா! ஆசை நரைக்கவில்லையோ?'' என்ற பழம் பாடலைத்தான் பொது மக்கள் எடுத்துக் காட்டுவார்களே தவிர, ''ஓஹோ! வயதாகிவிட்டதோ? அப்படியானால் சரி! நீங்கள் எங்கள் உரிமைகளை எப்படி வேண்டுமானாலும் மிதித்துத் துவைத்து நாசமாக்குங்கள்'' என்று கூறுவார்கள்?

ஆண்டவன் அழைத்தாராம்! ஆச்சாரியார் கூறுகிறார்!

''சமுத்திரம், சூரியன், பூமி, மரம், எல்லாவற்றையும் ஒரு சக்தி இருந்துதான் இயக்குகிறது. என்னையும் அந்தச் சக்திதான் அழைத்து இந்தப் பதவியில் அமரவைத்தது என்று கருதுகிறேன்.'' என்று தன் முத்தான வாய் திறந்து மாணிக்க மொழிகளை வீசியிருக்கிறார் மாம்பலத்து முனிவர்.

ஆண்டவன்தான் இவரை அழைத்தாராம்! தைரியமாகக் கூறியிருக்கிறார் ஆச்சாரியார்! நல்லவேளை! பொது மக்கள்தான் அழைத்தார்கள் என்று கூறாமல் இருந்தாரே! அதுவரைக்கும் அவருக்கு நாம் நன்றி செலுத்த வேண்டியதுதான்.

பொதுமக்கள்தான் என்னை அழைத்தார்கள் என்று கூறினால் உடனே பொதுமக்கள் பொய்! பொய்! என்று கூறிவிடுவார்கள்! இது தெரியும் மாம்பலத்தாருக்கு எனவேதான் அவர் ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டுவிட்டார். ஆண்டவனைப்பற்றி எதைச்சொன்னால்தான் என்ன—அவர் என்ன மறுத்தா பேசப் போகிறார்! கள்ள மார்க்கட் காதகர்களும் கொலை செய்த கயவர்களும் செய்கிற அபிஷேகங்கள் ஆராதனைகளைக் கூட வேண்டாம் என்று இதுவரை மறுத்துக் கூறியதில்லையே ஆண்டவன்! அப்படிப்பட்டவர் ஆச்சாரியார் தெரிவித்திருக்கிற இந்தச் சிறு வார்த்தையையா மறுத்துப் பேச ஓடோடி வரப்போகிறார்! வரமாட்டார் என்பது நன்றாகத் தெரியும் என்னை அழைத்தார் என்று அழுத்தந் திருத்தமாகக்கூறிவிட்டார்.

என்ன இருந்தாலும் ஆச்சாரியார், அபார அறிவாளிதான்! பொதுமக்களின் அழைப்பில்லாமலே பிரதம மந்திரியாக வருவதற்கும், அப்படி வந்தபிறகு என்னை அழைத்தது ஆண்டவன்தான் என்று தைரியமாகக் கூறுவதற்கும் அபாரமான அறிவு நிச்சயமாகத் தேவைதான்!

ஆனால் நமக்கு ஒரு ஐயப்பாடு.

அவன் அன்றி ஓரணுவும் அசையாது என்கிறார் ஆச்சாரியார்.

ஆகவே தான் பிரதம மந்திரியாக வந்திருப்பது ஆண்டவனுடைய திருவருளால்தான் என்று வியாக்யானம் வேறு செய்திருக்கிறார்.

அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது உண்மையானால், ஆச்சாரியா பிரதமராக வந்திருப்பதைக் கண்டித்து ஆயிரமாயிரம் மக்கள் தங்கள் எதிர்ப்புக் குரலை எழுப்பியிருக்கிறார்களே, அந்தச் செயலும் ஆண்டவனின் திருவருளால்தானே நடைபெற்றிருக்க வேண்டும்?

ஆச்சாரியாரைப் பிரதம மந்திரியாக ஆக்கியிருப்பவரும் ஆண்டவன்!

அவர் பிரதம மந்திரியாக வந்தது பெருந் தவறு என்று வீர முழக்கமிடுபவரும ஆண்டவனா? ஒன்றுக்கு ஒன்று பொருத்தமாக இல்லையே? என்று கேட்கிறீர்களா நீங்கள்?

தயவு செய்து கேட்காதீர்கள்! தெய்வீக உண்மைகளைச் சந்தேகிப்பதே பாவம் என்று திருவாய் மலர்ந்தருளிவிடுவார் மாம்பலத்து மாமுனிவர்!!

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவோடு இரவாக அலெக்சாண்டர் படை முழுதும் தங்கு தடையின்றி ஆற்றைக்கடந்தன. அலெக்சாண்டர் அன்றிரவே தாக்குவான் என்று எதிர்பார்க்கவில்லை போரஸ். அழகி ஆர்மீனா வின் நடனத்திலேயே களித்துக் கிடந்தான்.

போரஸின் படைகள் தக்க முன்னேற்பாடோடு இல்லாததாலும் அலெக்சாண்டர் அன்றிரவே திடீர்த் தாக்குதல் நடத்தியதாலும் போரஸ் படை பின் வாங்கி ஓட ஆரம்பித்தது. எண்ணிக்கையிலே அதிகமாயிருந்த கிரேக்கக் குதிரை வீரர்களின் வேல்கள் வேழங்களின் உடலைத் தைக்கவே, வெருண்டோடின அவைகள். அதோடு இயற்கையும் இடர் புரிந்தது. ஆகவே, போரஸின் பெரும் படைக்குச் பெருஞ்சேதம் விளைந்தது.

அஞ்சா நெஞ்சுடை போரஸ், அலெக்சாண்டரின் முன் கைதியாக கொண்டு வரப்பட்டான்! போரஸின் வீரத்தை மெச்சி, மாவீரன் அலெக்சாண்டர் தலை வணங்கி மரியாதை செய்தான்; இந்திய வீரனை, கிரேக்க வீரன் மார்புறத் தழுவிக்கொண்டான்!

"போரஸ்! ஆசியாவில் நான் கண்ட ஒரே வீரன் நீ தான்; உன் கலையார்வத்தைக் காயாக உருட்டி சூதாட்டத்தில் வெற்றி பெற்றுவிட்டேன்."

கிரேக்க வீரனின் பெருந் தன்மையைப் பார்த்துப் பரவசமடைந்தான் போரஸ்.

செலுகஸ் அங்கே வந்தான். அவன் முகம் வாட்டமுற்றுக் காணப்பட்டது.

"செலுகஸ், ஏதாவது முக்கியமான செய்தி உண்டா?"

"அரசே, கிரேக்க நாட்டின் ஈடு இணையற்ற கலைக் கருவூலத்தை அற்ப வெற்றிக்காக ஆசிய மண்ணிலே, பலியிட்டு விட்டீர்கள்!"

"என்ன?"

மன்னனின் கேள்விக்குப் பதிலிறுப்பது போல், கலையரசி ஆர்மீனாவின் சவத்தைப் போர் வீரர்கள் சுமந்துவந்து மன்னன் காலடியில் கிடத்தினர். விழி என்னும் வேல் வீசி, வேந்தர் இருவரின் இதயங்களை வெற்றி கொண்ட ஆர்மீனா, அவர்கள் முன்னிலையிலே பிணமாகக்கிடந்தாள்!

ஆம்! அலக்சாண்டர் இதயத்தின் அணையாத ஜோதி அணைந்துவிட்டது! கனல் கக்கும் கண்களிலே புனல் சொரிந்த வண்ணம் மண்டியிட்டு தன் இதய ராணிக்கு இறுதி வணக்கத்தைச் செலுத்தினான் அலக்சாண்டர்; தன் தோல்விக்கு வழி வகுத்த 'வஞ்சகி' என்பதையும் மறந்து, வணக்கம் செலுத்தினான் போரஸ் மன்னனும். கிரேக்க இந்தியப் படைகள் அணி அணியாக நிற்க, ராணுவ மரியாதைகளுடன் ஜீலம் நதிக்கரையிலே, ஆர்மீனாவின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. போரஸின் வீரத்தைப் புகழ்ந்து, அவன் நாட்டை அவனுக்கே அளித்தான் அலக்சாண்டர். இவ் வெற்றியால் அலக்சாண்டர் உள்ளம் மகிழவில்லை; ஆர்மீனாவை இவ் வெற்றிக்குக் கருவியாக்கியது தன் வீரத்துக்கு ஏற்பட்ட மிகப் பெரிய களங்கம் என்றே அலக்சாண்டர் கருதினான்.

சென்னை மாவட்ட தி. மு. கழகம்

பயிற்சி வகுப்புகளுக்கான ஏற்பாடு

13—4—52 மாலை 3-30 மணிக்கு இராயபுரம் 'அறிவகம்' தலைமை நிலையத்தில் நிர்வாகக் கமிட்டி கூட்டம் செயலாளர் என். வி. என். தலைமையில் நடைபெற்றது. 29 நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களும், கிளைக் கழகச் செயலாளர்களில் 11 பேரும் வந்திருந்தனர். பொதுக்குழு தீர்மானங்களை விளக்கியும் அதற்கேற்ப ஒவ்வொரு கிளைக் கழகத்தினரும் உடன் ஆவன செய்ய வேண்டுமென்றும் உறுப்பினர் சேர்க்கும் பணியை உடனடியாகத் தீவிரமாக செய்யுமாறும் கூறினார். பின்னர் உறுப்பினர்கள் விவாதித்துப் பேசியதற்கேற்ப கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) பொதுக்குழு உறுப்பினர் உடுமலை கனகராசன், சென்னை புளியாந்தோப்பிலுள்ள இயக்கத் தோழர் சண்முகராசன் ஆகியோரின் மறைவுக்கு அனுதாபந் தெரிவித்துக் கொள்கிறது. (2) மே மாதம் 4 முதல் 9-ந் தேதி வரை பணியாளர் பயிற்சி வகுப்பு நடத்துவதென்றும் ஒவ்வொரு கிளைக் கழக நிர்வாக உறுப்பினர்களும், (செயலாளர்கள் உள்பட) சென்னை மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களும் இப்பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன், தோழர் காஞ்சி மணிமொழியார் அவர்களை அமைப்பாளராக நியமிப்பதென்று தீர்மானிக்கப்பட்டது. (3) சொற பயிற்சி வகுப்பை மே மாதம் 11-முதல் 31க் தேதி வரை தினசரி நடத்துவதென்றும், இவ் வகுப்பின் அமைப்பாளராக தோழர் ம. சு. முத்தையா அவர்களை நியமிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது. மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்குச் செயலாளர் விளக்கம் கூற, மாலை 6-30 மணிக்கு கமிட்டி கூட்டம் இனிது முடிவுற்றது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"சாமி பெண்சாதிக்கு மருந்து வாங்கணுங்க" — மன்றாடினான் அவன்.

"மருந்தா வாங்கவேண்டும் அப்ப ஓட்டு போலீஸ்டேஷனை நோக்கி"—கோபத்துடன் மிரட்டினார் அவர்.

"இந்த ஒரு தடவை மட்டும்..." அவன் தன் இருகையையும் கூப்பினான்.

"மன்னிக்கவேண்டுமென்கிறாயா? சரி உன்னை நான் மன்னித்தால் என்னை யார் மன்னிப்பது? வீட்டில் நுழைய முடியாதே"—இப்படி பொன்னுசாமி வாய்விட்டுக் கூறவில்லை. ஆனால் நினைத்தார். போலீஸ்காரர் பொன்னுசாமியின் செவியில் காலையில் அவர் மனைவி கூறிய "பவுடர் டப்பி வாங்கிவரவேண்டும் இல்லாவிடில் .." என்ற கட்டளைக்குரல் ஒலித்துக்கொண்டிருந்தது.

வரதனின் உள்ளத்திரையில் அவனுடைய மனைவியின் சோக பிம்பம் தோன்றிக் கண்ணீர் வடித்தது.

"என்ன சொல்ற?" பொன்னுசாமி கர்ஜித்தார். வரதன் பதில் ஒன்றும் பேசவில்லை. இரண்டு ரூபாய்களை எடுத்து நீட்டினான். அவன் கண்களில் கண்ணீர் ததும்பியது.

பொன்னுசாமி புன்னகை பூத்தார்!

அவன் பெருமூச்சு விட்டான்!!

அவர் இதயம் மகிழ்ச்சியால் மலர்ந்தது!

அவன் உள்ளம் குமுறியது!!

அவர் சட்டத்தைக் காட்டிப் பொருள் பறித்தார்!

அவன் அதன் பிடியிலே அகப்பட்டுத் தவித்தான்!

வண்டிக்கார வரதன் அருகிலிருந்த கடையில் விளக்கைக் கொளுத்திக் கொண்டிருந்தான்.

அப்போது 'ஜல் ஜல்' என்ற சதங்கையொலியுடன் ஒரு வண்டி வந்து கொண்டிருந்தது. விளக்கில்லாமல் வந்துகொண்டிருந்த அந்த வண்டியைப் பார்த்த பொன்னுசாமியின் உள்ளம் இன்னொரு 'சான்ஸ்' என்ற எண்ணத்தால் பூரித்தது.

"யாரது வண்டி?"—பொன்னுசாமி ஆரம்பவிழா நடத்தினார்.

"யார் கேட்பது?"—வண்டிக்காரன் மிடுக்காகக் கேட்டான்.

"வண்டியில் விளக்கு எங்கே?"

"ஏற்றவில்லை"

அவனது அலட்சியப் பதிலைக் கண்ட பொன்னுசாமி "பெயர் என்ன 'சார்ஜ்' செய்திருக்கிறேன்" என்றார்.

"செம்மன்குடிப் பண்ணை வண்டிங்க!"

"என்ன பண்ணை வண்டியா?"

"ஆமாங்க! ஐயா உள்ளே இருக்காங்க"

போலீஸ்காரன் பொன்னுசாமி வண்டியின் உள்ளே நோக்கினார்.

பண்ணையார் பரமசிவம் பிள்ளை பொன்னுசாமியை நோக்கிப் புன்னகை பூத்தார்.

பொன்னுசாமி கை கூப்பி வணங்கினார். அதைத் தொடர்ந்து "நம்ப வண்டின்னு தெரியாதுங்க ...." என்று வார்த்தைகளை விழுங்கினார்.

"என்னய்யா 144! நாளைக்கு நம்ப வீட்டுப் பக்கம் வாரும்" என்றார் பண்ணையார்.

"ஆகட்டுங்க" என்றார் பொன்னுசாமி பணிவாக. அடுத்த வினாடி வண்டி பறந்தது.

இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்த வரதனது கண்கள் கண்ணீரைப் பொழியவில்லை; கனலைக் கக்கின. உள்ளத்திலே குமுறலுடன் பொன்னுசாமியை ஒரு பார்வை பார்த்துவிட்டு அவனும் கைகளால் கடிவாளத்தை வெட்டினான் வரதன்.

'ஏழைக்கு ஏது இன்பம்?" என்ற பாடலை அருகிலிருந்த 'ஜமுனா சவுண்டு சர்விஸ்' அழகாக ஒலிப்பரப்பிக் கொண்டிருந்தது. அந்த ஒலி காற்றிலே கலந்து வந்து வரதனுடைய செவியில் மோதின.

—

தி. மு. க. மாநில மாநாடு

நன்கொடை, டிக்கட், ஸ்டால் வாடகை ஆகியவற்றின் மூலம் கிடைத்த மொத்த வரவு	ரூ.	72,067
மொத்த செலவு	ரூ.	37,263
மிச்சமுள்ள தொகை	ரூ.	34,804

தி. மு. க. தலைமை நிலையக் கட்டிடம் வாங்கிய வகையில் இன்னமும் பாக்கி செலுத்தப்பட வேண்டியிருக்கிற ரூ. 5615 ஐ இந்த மிச்சத் தொகையிலிருந்து கொடுத்துவிட வேண்டுமென்றும், அந்த 5615 போக மீதமிருக்கும் தொகை ரூ. 29,179-ஐ கொண்டு கழகச் சார்பில் ஒரு தினசரி தொடங்கவேண்டு மென்றும், 6—4—52-ல் ஈரோட்டில் கூடிய பொதுக்குழு முடிவு செய்திருக்கிறது.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞானமுறைமூலம் மழை பொழியும்படி செய்யப்பட்டு வருகிறது, சென்ற பல ஆண்டுகளாக.

இந்தியாவிலேயும் இந்த முறை மூலம் மழையை வரவழைக்க முடியுமா என்று, இந்திய வான நிலை ஆராய்ச்சிக் கழகத்தார் ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

இப்படிப்பட்ட நிலையிலே ஆச்சாரியார் கூறுகிறார் விஞ்ஞான முறைகளால் மழையை வரவழைக்க முடியாது என்று!

எவ்வளவு பெரும்பொய்!

விஞ்ஞானம், மழையை வரவழைத்துக் காட்டுகிறது சோவியத் ரஷ்யாவிலே, அமெரிக்காவிலே, வேறு பற்பல நாடுகளிலே!

ஆனால் ஆச்சாரியார் கூறுகிறார் விஞ்ஞானத்தால் அப்படிச் செய்ய முடியாதென்று.

விஞ்ஞான முறை மூலம் வரவழைக்கப்பட்ட மழையைக் கொண்டு பயிராக்கப்பட்ட அமெரிக்க கோதுமையை இறக்குமதி செய்து அதை உட்கொள்ளவும் செய்கிறோம் நாம். அப்படி உட்கொள்ளுகிற நேரத்திலேயே ஆச்சாரியார் கூறுகிறார் விஞ்ஞானத்தால் மழையை வரவழைக்கமுடியாதென்று!

அற்புதமான பொய்யை அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார் ஆச்சாரியார்.

அதுமட்டுமா?

"எத்தனை யந்திரங்களிருந்தாலும் மழை பெய்யும்படி செய்யமுடியாது. ஆகவே மழை வேண்டுமென்று ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை செய்யுங்கள். மழை கிடைப்பதற்கு அது ஒன்று தான் மார்க்கம்." என்று வேறு கூறியிருக்கிறார்.

மழை கிடைக்காத காரணத்தால் சென்ற ஐந்தாண்டுகளாகத் திண்டாடித் தவிக்கும் ஆயிரமாயிரம் உழவர்களெல்லாம் நாஸ்திகர்களல்ல. அத்தனை பேரும் அசல் ஆஸ்திகர்கள்தான். அவர்கள் ஏதோ இதுவரை மழை வேண்டுமென்று ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை செய்யாதது போலவும், அப்படிச் செய்யாததால்தான் மழைவராதது போலவும், அவர்கள் மட்டும் பிரார்த்தனை செய்துவிட்டால் உடனே மழை வந்துவிடும் என்பது போலவும் ஆச்சாரியார் பேசியிருக்கிறாரே, அது உண்மையல்ல. சென்ற ஐந்து ஆண்டுகளாக, உழவர்கள், மழையைக் காரும் மாரிக்கே வா என்று இறைவனைப் பார்த்து இறைஞ்சாத நாளே கிடையாது.

ஆனால் அந்தப் பஜகோவிந்தத்தால், மழை கிடைக்கவில்லை.

கிடைக்காது.

மழை நமக்குக் கிடைக்கவேண்டுமானால் அதற்கு இரண்டே வழிகள் தான் உண்டு.

மழை தானாகப் பெய்யவேண்டும்—அது ஒரு வழி.

சோவியத் ரஷ்யா, அமெரிக்கா முதலிய நாடுகளில் கையாள்வதைப் போல, விஞ்ஞான முறைகளைக் கையாண்டு மழையை நாம் பொழிய வைக்கவேண்டும் இது மற்றோர் வழி.

மழை தானாகப் பொழியாத காரணத்தால், இந்த இரண்டாவது வழியைக் கையாண்டு மழையைப் பொழியவைக்கவேண்டும் ஆச்சாரியார். அது அவருடைய முதற் பெருங்கடமை.

ஆனால் அவரோ, **"என் பதவி சாமர்த்தியத்தால் ஆகக்கூடாத காரியங்களில் மழையும் ஒன்று' ஆகவே மழை பெய்யப் பிரார்த்தியுங்கள்"** என்று திருவாய் மலர்ந்தருளிவிட்டார்! பஜகோவிந்தம் பாடுங்கள் என்று தன் சிஷ்யகோடிகளுக்குக் கட்டளை இட்டுவிட்டார்!!

விஞ்ஞான முறையால் மழையை வரவழைத்து நற்பலன் கண்டு வரும் அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகள் கைகொட்டிச் சிரிக்கும் இந்த முதியவர் தந்துள்ள இம்முத்து மொழிகளைக் கேட்டால்!

நிச்சயம் சிரிக்கும்!

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கான முறையில் அவசர அவசரமாக வெளியிட்டிருக்கும் ஏடு எது தெரியுமோ? சி. ஆர். ஸ்ரீனிவாச **அய்யங்கார்** நடத்தும் சுதேசமித்திரன்!

அய்யர் — அய்யங்கார் — சாஸ்திரி—சர்மாக்கள் மட்டுமே பெருந்திரளாக வாழும் ஒரு வட்டாரத்தில், அய்யர்—அய்யங்கார்—சாஸ்திரி—சர்மாக்களுக்கு மட்டுமே சொந்தமான ஒரு கல்லூரியில், ஓர் அய்யரைப் பாராட்டிப் புகழ்ந்து இரண்டு அய்யர்கள், ஓர் சாஸ்திரி, ஓர் அய்யங்கார் ஆகியோர் சொன்மாரி பொழிய, அப்படிச் சொன்மாரி பொழிந்ததற்காக ஓர் சாஸ்திரிகள் வந்தனோபசாரம் கூற, இவ்வளவு நிகழ்ச்சிகளையும் ஓர் அய்யங்கார் நடத்துகிற ஒரு தினத்தாள் ஒப்பற்ற மகிழ்ச்சியுடன் வெளியிட்டு உதவியிருக்கிறது.

அதாவது தொடக்கம் முதல் இறுதிவரையல்லவா "அவர்கள்" மயம்!

ஓர் அய்யரைப் பாராட்ட மற்ற அய்யர்களும் அய்யங்கார்களும் சாஸ்திரிகளும் சர்மாக்களும் எவ்வளவு மகிழ்ச்சியுடன் ஓடோடி வந்திருக்கிறார்கள்!

இனப்பற்று என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்!

இப்படி இருப்பதால் அல்லவா ஆரிய இனம் ஈடும் எடுப்புமற்ற செல்வாக்குடன் திகழ முடிகிறது!

இப்படி இருந்தால் அல்லவா எந்த இனமும் ஓங்கி வளர்ந்து உயர்ந்து நிற்க முடியும்?

இப்படி இல்லாததால் அல்லவா திராவிட இனம் தலை குனிந்தபடி கிடந்து தாழ்மை நிலையில் தவிக்க வேண்டியிருக்கிறது?

திராவிட இனம் சிறப்பும் செல்வாக்கும் பெறவேண்டுமானால், அந்த இனத்தவரிடத்திலேயும் இப்படிப்பட்ட இனப்பற்று, கட்டுப்பாடு, ஒருவரை ஒருவர் போற்றிப் பாதுகாக்கும் குழு உணர்ச்சி வளரவேண்டாமா?

திராவிடமே! ஆரியத்தைப் பார்!

அந்த இனப்பாதுகாப்பு உணர்ச்சியை நீயும் பெறு!

பெற்றால்தான் நீ வாழமுடியும் சிறப்பாக!

பணியாளர் பயிற்சி வகுப்பு

சென்னை மாவட்ட தி. மு. க. செயற்குழுவின் தீர்மானத்திற்கிணங்க பணியாளர் பயிற்சி வகுப்பு மே மாதம் 4-ந் தேதி முதல் 9-ந் தேதி வரை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. முழுவிவரமும் இயக்க இதழ்களில் விரைவில் வெளியிடப்படும். சென்னை மாவட்ட கிளைக் கழகச் செயலாளர்கள் தங்கள் தங்கள் கழகத்திலிருந்து பயிற்சி பெற விரும்பும் தோழர்களின் பெயரை விரைவில் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரிவிக்குமாறு வேண்டுகிறேன்.

காஞ்சி மணிமொழியார்,
அமைப்பாளர்
தி.மு.க. பணியாளர் பயிற்சிவகுப்பு
131, பிராட்வே சென்னை-1

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers, 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons.)